
# கோபுரம்

தகவல் இதழ்
பங்குனி 1993



தாயினு நல்ல தலைவரென் றடியார்
    தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
    மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
    நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
    கோணமா மலையமர்ந் தார்க்கு

குடமுழுக்குக் காணும் பக்தர் கூட்டம்


இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

34910

# பக்திப் பெருவிழா - 1993



இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற பக்திப் பெருவிழாவில் வாரியார் சுவாமிகள் விருதளிப்பதையும் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களையும் மேலுள்ள படத்திற் காணலாம். கீழே உள்ள படத்தில் வாரியார் சுவாமிகள், இராஜாங்க அமைச்சர் ஆகியோருடன் விருது பெற்ற அருளாளர்களில் ஒரு பகுதியினர் காணப்படுகின்றனர்.



உ

# கோபுரம்

இந்து சமய, கலாசார திணைக்கள வெளியீடு

மலர்: 4 ★ ஆங்கிரச வருடம், பங்குனி மாதம் 1993 ★ இதழ்: 1

## எண்ணம்

இவ்வாண்டு, திருகோணமலையில் மூன்று தினங்கள் பொங்கல் விழாவுடன் அமைச்சினதும், இந்து சமயத் திணைக்களத்தினதும் பணிகள் ஆரம்பமாகின. மூன்று தினங்களிலும், கருத்தரங்கு, கலை அரங்கு, கவியரங்கு, நூற் கண்காட்சி என்பன மிகச் சிறப்பாக இடம் பெற்றன.

தொடர்ந்து, கோணேசர் ஆலயக்குடமுழுக்கு மிக விமரிசையாக நடைபெற்றது. பாடல்பெற்ற திருத்தலத்தில் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடியது. திருமலை உச்சியினின்றும் தெய்வீக ஒளி திக்கெங்கும் பரவியது. திருமலை வாழ் இந்துக்கள் மட்டுமன்றி, இலங்கை வாழ் இந்து மக்கள் அனைவருமே பெருமகிழ்வு கொண்டனர்.

கொழும்பில் நடைபெற்ற பக்திப் பெருவிழா, ஆன்மீக அருளாளர்களுக்கு அரச விருதளிக்கும் கால்கோள் விழாவாக மலர்ந்தது. ஞானவள்ளல், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் எழுபத்தேழு ஆன்மீகப் பேராளர்களுக்கு விருதளித்து கௌரவித்தார். இந்து மன்றங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கருத்தரங்கு, நாட்டிய நாடகம், கலைக்களஞ்சியம் தொகுதி இரண்டின் வெளியீடு, வாரியார் சுவாமிகள் அருளுரை என அன்றைய பொழுது அருள்மணம் கமழ்ந்த பொழுதாகத் திகழ்ந்தது.

இவை பற்றிய செய்திகளும், வழமையான அம்சங்களும் இவ்விதழில் இடம் பெறுகின்றன.

'கோபுரம்' வாசகர்கள் அனைவருக்கும் 'ஸ்ரீமுக' புத்தாண்டு எல்லா நலன்களையும் அளிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

---

★ கோபுரம் இதழ் பற்றிய உங்கள் கருத்துக்களை தவறாது எமக்கு எழுதி அனுப்புங்கள்.

முகவரி :- பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
''காப்புறுதி இல்லம்'' 9-ம் மாடி,
21, வோக்ஷோல் வீதி, கொழும்பு-02.

# பக்திப் பெருவிழா 1993

பெப்ரவரி மாதம் 21 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கையின் பக்திப் பேரெழுச்சியின் திருநாளாக அமைந்தது. இந்துசமய கலாசார இராஜாங்கஅமைச்சு ஏற்பாடு செய்திருந்த பக்திப்பெருவிழா அன்றைய தினம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

அன்று காலை, பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற இந்து சமயக்கருத்து, இந்துக்கலைக் களஞ்சிய வெளியீடு, மாலை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற விருதுவழங்கல், வாரியார் சுவாமிகள் அருளுரை அனைத்து நிகழ்ச்சிகளுமே மிகச்சிறப்பாக அமைந்திருந்தன.

## இந்துசமயக் கருத்தரங்கு

'ஆலயங்கள் சமுதாய மையங்கள்' எனும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கிற்கு வடகிழக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளர் திரு. வி. என். சிவராஜா அவர்கள் தலைமை தாங்கினார். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

திரு. ஹரிஹர சர்மா, திரு. கே. குமாரசாமி, திரு. வி. நாச்சியப்பன் செட்டியார், திருமதி வசந்தா வைத்தியநாதன், புலவர் க. சிவானந்தன், திருமதி சாந்தி நாவுக்கரசன், திரு. க. நாகேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்



இந்துக் கலைக்களஞ்சியம் தொகுதி இரண்டின் முதற்பிரதியை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களிடம் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் கையளிப்பதையும், கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

நல்லதைச் செய்வது தெய்வத்தை வழுத்துவதற்கு நிகர்.



இந்து சமயக் கருத்தரங்கில், நிணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா ஆகியோர் முறையே சிறப்புரை, நன்றியுரை நிகழ்த்தினர். நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த திரு. வி. என். சிவராஜா இந்துக் கலைக் களஞ்சியத் தொகுதி இரண்டின் பதிப்பாசிரியர் பேராசிரியர் சி. பத்மநாதன் ஆகியோரும் படத்திற் காணப்படுகின்றனர்.

னர். நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் இருந்து வந்து கலந்துகொண்ட ஆலய, இந்துமன்றப் பிரதிநிதிகளும் தத்தம் கருத்துகளைத் தெரிவித்தனர்.

> மோகமாகிய முதலையின் வாயில், மக்கள் எப்படிப் பரிதாபமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்! அந்தோ! இதயத்தைப் பிளக்கக்கூடிய அவர்களின் சோகக் குரலைக் கேளுங்கள். முன்னேறிச் செல்லுங்கள்! கட்டுண்டு கிடக்கும் மக்களைப் பந்த பாசங்களிலிருந்து விடுவிப்பதற்காகவும், எளியவர்களின் துன்பச் சுமையைக் குறைப்பதற்காகவும், அறியாமையில் மூழ்கியிருக்கும் இருண்ட கிணறுகள் போன்ற உள்ளங்களை ஒளி பெறச் செய்வதற்காகவும் ஏ வீரர்களே! முன்னேறிச் செல்லுங்கள்! 'அஞ்சாதே! அஞ்சாதே!' என்று வேதாந்த முரசு முழங்கிக்கொண்டிருப்பதைக் கேளுங்கள்.
>
> — சுவாமி விவேகானந்தர்

## இந்துக் கலைக்களஞ்சியம் - 2, வெளியீடு

கருத்தரங்கினைத் தொடர்ந்து இந்துக்கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் தொகுதி வெளியிடப் பட்டது. இந்நிகழ்ச்சிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், முதற் பிரதியை சுவாமியிடம் வழங்கி நூலை வெளியிட்டு வைத்தார்.

இந்நூலின் பிரதம பதிப்பாசிரியரும் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான திரு. சி. பத்மநாதன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

உன்னை நீ வெல்லு ; அப்பொழுது நீ உலகத்தை வென்றவனாவாய்.

திணைக்களத்தின் உதவிப்பணிப் பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர் களின் நன்றியுரையுடன் காலை நிகழ்ச் சிகள் நிறைவு பெற்றன.

## நாட்டிய நாடகம்

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷ னில் மாலை நிகழ்ச்சிகள் நடைபெற் றன. திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நெறியாள்கையில் நாட்டிய கலாமந்திர் மாணவியர் வழங்கிய ''குமாரசம்பவம்'' எனும் நாட்டிய நாடகம் கண்கொள் ளாக் காட்சியாக அமைந்திருந்தது. பங்கு கொண்ட மாணவியர் அனைவரும் தமது பரதக் கலைத் திறமைகளை நிரூபித் தனர். முருகனின் லீலைகள் அழகுற அபிநயிக்கப்பட்டன. மண்டபம் வழிந்த கூட்டம் மெய்ம்மறந்து போய் காணப் பட்டது.

மேடை தேவருலகம் போலக் காணப் பட்டமைக்கு அதன் அலங்காரமே காரண மாகும். மேடையை அழகுற அமைப் பதில் அமைச்சர் அவர்களின் பிரத்தி யேகச் செயலாளர் திருமதி கீதா நித்தி யானந்தன் அவர்கள் பெருமுயற்சி மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன், பின் னணிக் கலைஞர்கள், கலாமந்திர் மாண வியர், ஒலி, ஒளி, மேடை அமைப்பா ளர்கள் அனைவருக்கும் வாரியார் சுவா களின் வாழ்த்துக்களே பெரும் பாராட் டாக அமைந்தன.

### பாரதி வாக்கு

பக்தியாவது தெய்வத்தை நம்பு தல், குழந்தை தாயை நம்புவது போலவும் பத்தினிப்பெண் கண வனை நம்புவது போலவும் தெய் வத்தை நம்பவேண்டும். கோயிலுக் குப் போனாலும் சரி, போகாவிட் டாலும் சரி, கும்பிட்டாலும் சரி, கும்பிடாவிட்டாலும் சரி பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினாலே தெய்வத்தின் அருள் நமக்குகிடைக் கும். — பாரதியார்

## விருதுவழங்கல்

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவ ராஜ் அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து எழுபத்தேழு ஆன்மீகப் பேராளர்கள் அரச விருது பெற்றனர்.

அனைவருக்கும் இராஜாங்க அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌர வித்தார். வாரியார் சுவாமிகள், விருது களை வழங்கினார். ஆலய அரும்பணி



பக்திப் பெருவிழாவில் வாரியார் சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவதையும், கலந்து கொண்ட கூட்டத்தினரின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

மனம் உள்நோக்கிப் போகுமளவு அதன் தெய்வீக ஆற்றல் அதிகரிக்கிறது.



பக்திப் பெருவிழாவில் திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நாட்டிய கலா மந்திர் மாணவிகள் 'குமார சம்பவம்' எனும் நாட்டிய நாடகமொன்றினை வழங்கினர்; நாடகத்தின் ஒரு அழகிய காட்சி!

ஆற்றும் அருளாளர்கள், பொன்னாடையோடும், தத்தம் விருதுகளோடும்மேடையில் வீற்றிருந்த காட்சி அவர்களின் ஆன்மீகப் பணிகளுக்கு அளிக்கப்பட்ட உன்னதமான கௌரவத்தைப் பறைசாற்றியது.

## வாரியார் அருளுரை

அறுபத்துநான்காம் நாயன்மாராகவும் ஞானவள்ளலாகவும், தெய்வீகச் சான்றோராகவும் திகழுகின்ற வாரியார் சுவாமிகள் ''முருகபக்தியின் மேன்மை'' பற்றி அருளுரை ஆற்றினார். அவருக்கே உரிய பாணியில் அருட்சிந்தனைகளை அள்ளித் தூவினார். முழுநாள் நிகழ்ச்சிகளின்பின் அன்று இராமகிருஷ்ண மண்டபத்திற் பெருகிநின்ற அனைவரும் மிகுந்த மன நிறைவு அடைந்தமை காணக்கூடியதாக இருந்தது. அருட்பணி புரிவோருக்கு ஆண்டுதோறும் அரசகௌரவம் வழங்கப்படுவதற்கான கால்கோள் நாட்டப்பட்டது.

அன்றையதினம், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் சிந்தனை, செயல்வடிவம் பெறுவதற்கு அமைச்சு அதிகாரிகள் பெரும்பணி புரிந்தனர்.

இராஜாங்கச் செயலாளர் திரு. கா. தயாபரன், திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் ஆகியோர் விழா நிகழ்வுகளை நெறிப்படுத்தினர்.

விழா மிகச்சிறப்பாக அமைவதில் அயராது பணிசெய்தோர், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா ஆகிய இருவருமாவர். இருவரின் பங்களிப்பும் விழாவை களைகட்டச் செய்தது.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் உட்பட, அமைச்சு அலுவலர்கள், திணைக்கள அலுவலர்கள் அனைவரும் இணைந்து பணிசெய்தமை மகிழ்வுடன் நினைவுகூரத்தக்க விடயமாகும்.

தேடவும் வேண்டாம், தவிர்க்கவும் வேண்டாம் ! வருவதை வருகிறபடி ஏற்றுக்கொள்.

# பக்திப் பெருவிழாவில் விருது பெற்றோர்

### அ. தெய்விகமாமணி

1. பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள்.

### ஆ. வேதாகமக் கிரியா சூடாமணி

1. சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் கொழும்பு – 13.
2. சிவஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் கொழும்பு – 06.
3. சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் கொழும்பு – 13.
4. சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் மாவிட்டபுரம்.
5. சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் கீரிமலை.

### இ. வேதாகம மாமணி

1. சிவஸ்ரீ சண்முகரட்ணசர்மா கொழும்பு – 10.
2. சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் கொழும்பு – 02.
3. சிவஸ்ரீ பூரணானந்தக் குருக்கள் மட்டக்களப்பு.
4. சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் கொழும்பு – 10.
5. சிவஸ்ரீ இரவிச்சந்திரக்குருக்கள் திருகோணமலை.

### ஈ. தொண்டு சீர்மாமணி

1. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெல்லிப்பளை.

### உ. சிவநெறிச் செம்மல்

1. திரு. வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை கொழும்பு.
2. திரு. ஆர். பழனியப்பன் செட்டியார் கொழும்பு.
3. திரு. எம். திருப்பதியாப்பிள்ளை கொழும்பு – 04.
4. திரு. சி. நாச்சியப்பன் செட்டியார் கொழும்பு - 04
5. திரு. குமாரதாஸ் மாப்பாண–முதலியார் நல்லூர்.
6. திரு. மாரிமுத்து செட்டியார் மாத்தளை.
7. திரு. ஆர். ஜி. பெருமாள் பண்டாரவளை.
8. திரு.வே. சின்னத்தம்பி – செங்கலடி.
9. திரு. பொ. வல்லிபுரம் கொழும்பு-05.
10. திரு. சி. தனபாலா கொழும்பு – 02.
11. திரு. தி. செந்தில்வேள் கொழும்பு - 13.
12. திரு. எஸ். சின்னத்துரை மட்டக்களப்பு.
13. திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி – கண்டி.

### ஊ. ஞான சிரோன்மணி

1. பண்டிதர் மு. கந்தையா – ஏழாலை.
2. பண்டிதர் இ. வடிவேல் திருகோணமலை.
3. சைவப்புலவர் வி. விஸ்வலிங்கம் களுவாஞ்சிக்குடி.
4. டாக்டர். கே. வேலாயுதம்பிள்ளை கொழும்பு - 06.
5. திரு. ஆ. குணநாயகம் கொழும்பு – 06.
6. திரு. கே. குருசாமி கொழும்பு – 07.
7. திருமதி வசந்தா வைத்தியநாதன் கொழும்பு - 13.
8. வித்துவான் க. ந. வேலன் கொழும்பு – 06.
9. திருமதி மீனாட்சி பொன்னுத்துரை கொழும்பு – 06.

### எ. சைவ நன்மணி

1. திரு. சி. ஹரிஹர சர்மா கொழும்பு – 13.
2. திருமதி கங்கேஸ்வரி கந்தையா மட்டக்களப்பு.

---

தன் உற்றத்தை மறைத்து வைப்பவன் திருப்பத் திருப்பக் குற்றம் செய்பவன் ஆகிறான்.

3. புலவர் க. சிவானந்தன் கொழும்பு – 06.
4. புலவர் சி. விசாலாட்சி கிளிநொச்சி.
5. திரு. இரா. மயில்வாகனம் கொழும்பு - 13.
6. திரு. ஏ. எம். துரைசாமி கொழும்பு – 03.
7. திரு.என். செல்லப்பா கொழும்பு - 04.
8. சிவஸ்ரீ இ. பிரேமகாந்தக் குருக்கள் நோர்வூட்.
9. சிவஸ்ரீ காந்தன் குருக்கள் கொழும்பு - 13.

## ஏ. இறைபணிச் செம்மல்

1. திரு. க. கனகராஜா-யாழ்ப்பாணம்.
2. திரு. ஏ. துரைசாமிப்பிள்ளை-கண்டி.
3. திரு. ஏ. ரெத்தினவடிவேல் கொழும்பு-03.
4. திரு. பி. சுந்தையா (காந்தி மாஸ்டர்) திருகோணமலை.
5. திரு. என். கே. மயில்வாகனம் கொழும்பு - 11.
6. திரு. கே. பாலசுப்பிரமணியம் கொழும்பு - 02.
7. திரு. எஸ். தம்பிஐயா தம்பிலுவில்.
8. திரு. எஸ். சுந்தரலிங்கம் திருகோணமலை.
9. திரு. எல். முத்தையா - பதுளை.
10. திரு. மு. கார்த்திகேயன் ஹப்புத்தளை.
11. திரு. பி. எஸ். லெட்சுமணச் செட்டியார் - நாவலப்பிட்டி.
12. திரு. எஸ். ரி. சாமி கொழும்பு - 15.
13. திரு. ச. முத்தையா - நாவலப்பிட்டி.
14. திரு. பி. கந்தசாமி பொகவந்தலாவை.
15. ஏ. எஸ். எஸ். சோமசுந்தரம் பிள்ளை கொழும்பு – 13.

## ஐ. அருட்கலைவாரிதி

1. திரு. என். கே. பத்மநாதன் அளவெட்டி.
2. திரு. பி. பாலகிருஷ்ணன் கொழும்பு – 13.
3. திரு. வீரமணிஐயர் இணுவில்.
4. திரு. எஸ். புண்ணியமூர்த்தி அளவெட்டி.
5. திரு. க. செல்வராசா மாத்தளை.
6. திரு. சண்முகவடிவேல் வவுனியா.

## ஒ. அருட் கலைத் திலகம்

1. திரு. பெ. சோமாஸ்கந்தர் - உடப்பு
2. திரு. இரா. சிவஅன்பு கல்முனை.
3. திரு. எஸ். சிவலிங்கம் செங்கலடி, மட்டக்களப்பு.
4. திரு. எஸ். எஸ். மகேஸ்வரன் கொழும்பு - 04.
5. திரு. சி. குமாரசாமி கொழும்பு - 13.
6. திரு. ஆர். குழந்தைவேல் மட்டக்களப்பு.
7. திரு. ரி. மாணிக்கவாசகர் கொழும்பு - 06.
8. திரு. ஆ. நவரெத்தினஐயா செங்கலடி.
9. திரு. எஸ். தம்பிராஜா கொழும்பு - 13.
10. திரு. கிருஷ்ணசாத்துமணி பலாங்கொடை.
11. திரு. த. இராஜரத்தினம்–ஹாலி எல.
12. திரு. கா. யோகநாதன் தெஹிவளை.
13. திருமதி ஷாமினி இராமநாதன் ஹப்புத்தளை.

## சக்தி தேவாரம்

அன்னைமா சக்தியே சக்தி இன்பமில்லாத நிலையே சக்தி
துக்கமில்லாக் கண் விழிப்பே சக்தி அன்பு கனிந்த கனிவே சக்தி
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி
எண்ணத்திருக்கும் எரியே சக்தி முக்தி நிலையின் முடிவே சக்தி.

நாம் நம்மை மறந்திருக்கிறபொழுதே அரும்பெருங்காரியங்களைச் செய்து முடிக்கிறோம்.

# திருமலையில் பொங்கல் விழா

இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சு, வடகிழக்கு மாகாணசபை நிர்வாகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த பொங்கல்விழா தைமாதம் 15, 16, 17ம் திகதிகளில் திருமலையில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

முதல்நாள் நிகழ்ச்சி அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குடன் கூட்டுறவு மண்டபத்தில் ஆரம்பமானது. இந்துசமயத் திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சிக்கு இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ், பிரதம அதிதியாகக் கலந்து உரை நிகழ்த்தினார். அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன், காந்திமாஸ்டர், அன்புமணி இரா. நாகலிங்கம் திரு. எஸ். தெய்வநாயகம், செல்வி க. தங்கேஸ்வரி ஆகியோரும் சிறப்புரை நிகழ்த்தினர்.

## கலையரங்கு

அன்றுமாலை, இந்துக்கல்லூரி திறந்த வெளி அரங்கில், திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன் அவர்கள் தலைமையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருமலை மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவமாணவியர் இசைக்கச்சேரி, நடனங்கள், கோலாட்டம், வில்



பொங்கல் விழாக்கலையரங்கில், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் உரை நிகழ்த்துவதையும், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், சமூகக் கவிஞர் இளந்தேவன், திருமதி தேவராஜ், திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ண சிங்கம் இராஜாங்கச் செயலாளர் திரு. கா தயாபரன் ஆகியோர் முன்வரிசையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். கூட்டத்தினரில் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி [illegible] திரு. எஸ். எதிர்மன்னசிங்கம், திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். குமார் வடிவேல் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

---

அகத்தில் இனிமை படைத்திருப்பவனுக்குப் புறத்தில் அனைத்தும் இனிமை நிறைந்தவைகளாகக் காட்சி கொடுக்கின்றன.

## கோபுரத்திற்கு அருளாளர் வாழ்த்து

(அண்மையில் இலங்கை வந்திருந்த வாரியார் சுவாமிகள், 'கோபுரம்' கடைசி இதழைப் பார்த்து அளித்த வாழ்த்து.)

சீராரும் கோபுர திங்கள் வெளியீடு,
தாரார் தணிகேசன் தண்ணருளால்—பாரார்
புகழும் பரிசுடனே பொன்பொருள் ஓங்கி
தகவுடனே வாழ்க தழைத்து.

16-2-93
கொழும்பு.

அன்புள்ள
கிருபானந்தவாரி

(திருப்பனந்தாள், ஸ்ரீகாசி மடாதிபதி, கைலைமாமுனிவர் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் எழுதி அனுப்பிய வாழ்த்து.)

கோபுரம் 'தகவல் இதழ்' பார்வையிட்டோம். மகிழ்ச்சி. ஆன்மீகம், இலக்கியம் முதலான பல்துறைப் பொருள் அடங்கிய கட்டுரைகளும் சிறு விளக்கங்களும் இலக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய விவரக் குறிப்புகளும் அழகுறும் படங்களும் கூடி இதழை மிகவும் பயனுள்ளதாக்கியுள்ளன. பலர்க்கும் விருப்பூட்டக்கூடிய இதழாகப் பரிமளிக்கிறது. 'இதழ்' மென்மேலும் சுவைமிகு அம்சங்களுடன் வெளிவரச் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

27-11-91
தஞ்சாவூர்.

' சிவசிவ '

ுப்பாட்டு, நாடகம், ஆகிய நிகழ்ச்சிகளை வழங்கினர். நிகழ்ச்சியிற் கலந்து கொண்ட அனைவருக்கும், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் சான்றிதழ்கள் வழங்கினார்.

### நூற்கண்காட்சி

16ம் திகதி காலை ஸ்ரீசண்முகவித்தியாலய மண்டபத்தில் நூல்கண்காட்சி இடம்பெற்றது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் வடகிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரட்ன, வடகிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன், இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. கா.தயாபரன், திணைக்களப்பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் ஆகியோர் குத்து விளக்கேற்றி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர். கண்காட்சியும் நூல்விற்பனையும் இரண்டு தினங்கள் இடம்பெற்றன. திணைக்கள விற்பனைக் கருமபீடம் மூலம் பெருந்தொகையான தமிழ் நூல்கள் விற்பனைக்கு இடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### கருத்தரங்கு

சனிக்கிழமை காலை, ஸ்ரீசண்முக வித்தியாலய மண்டபத்தில், மேலதிக அரச அதிபர் திரு. நா. புவனேந்திரன்

உள்ளிருக்கும் தெய்விகத்தை ஒளிரவிக்க வல்லது சிரத்தை.

அவர்கள் தலைமையில் கருத்தரங்குஇடம் பெற்றது. வடகிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

திருமதி சித்தி பத்மநாதன் தமிழகக் கவிஞர் இளந்தேவன் ஆகியோர், கருத்துரை வழங்கினர்.

## கலையரங்கு

சனிக்கிழமை மாலை, இந்துக்கல்லூரி திறந்தவெளி அரங்கில், கலையரங்கு இடம் பெற்றது. உலகப்பல்கலைக் கழக நிறுவன இயக்குநர், திரு. அ. சிவலோகநாதன் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தார்.

திருமலை மாவட்டத்தமிழ்ப் பாடசாலைகளின் மாணவ மாணவியர் கலை நிகழ்ச்சிகள் வழங்கினர்.

நிகழ்ச்சியில் கிராமிய நடனம், கோலாட்டம், பரதநாட்டியம், நாட்டிய நாடகம், நாடகம் என்பன இடம்பெற்றன.

## கவியரங்கு

17ம் திகதி ஞாயிறன்று காலை ஸ்ரீ சண்முகவித்தியாலய மண்டபத்தில் கவியரங்கு இடம் பெற்றது.

''பொங்கிடும் உணர்வு'' எனுந்தலைப்பில் இடம்பெற்ற இக்கவியரங்கிற்கு, தமிழகக் கவியரசர் இளந்தேவன் தலைமை வகித்தார். கவிஞர்கள், தாபி சுப்பிரமணியம், திருமதி சிதரன், செல்வி. இ. செல்வராணி, திரு. சித்திரவேலாயுதம், தாகம் மைக்கல் கொலின் ஆகியோர் கவியரங்கிற் கலந்து சிறப்பித்தனர்.

நீ கடவுளை நேசிக்கும் அளவு உன் பெற்றோர்களை நேசி. நீ அனைவரிடமும் அன்பு கொள்ளப் பழகினால் உனக்கு மனித இனத்தின் மீது தன்னலமற்ற அன்பு ஏற்படும். இவ்வன்பு வீட்டில் தொடங்குகிறது. முதலில் உன் பெற்றோர் பின் சகோதர சகோதரியர், சுற்றத்தார், அண்டை அயலார், பள்ளித்தோழர்கள், உன் இனத்தவர், உன் நாடு, பின்பு உலகம் முழுவதும் எனஅன்பு பரவுகிறது. சிறு மனத்தில் ஊன்றப்பட்ட அன்பாகிய சிறு விதை இவ்வாறு சிறிது சிறிதாக வளர்ந்து அகில அன்பாகப் பரிணமிக்கின்றது.

– சுவாமி சிவானந்தர் –



பொங்கல் விழா நூல் கண் காட்சியை வடகிழக்கு மாகாணசபை ஆளுநர், லெப். ஜெனரல் நளின் செனவிரட்ன, இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், இராஜாங்க செயலாளர் திரு. கா. தயாபரன், அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் திருமதி கீதா நித்தியானந்தன், திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் ஆகியோர் பார்வையிடுவதைப் படத்திற் காணலாம்.

பரம்பொருளை சுவானுபூதியில் அறிபவனே பெருமகன் ஆகிறான்.

# திணைக்களச் செய்திகள்

## புதிய மாணவர் தெரிவு

மட்டக்களப்பு விபுலாநந்த இசை நடனக் கல்லூரிக்கு 1993ம் ஆண்டு புதிய மாணவர் அநுமதிக்கான போட்டிப் பரீட்சை ஜனவரி மாதம் 2ம் திகதி திணைக் களத்தில் நடைபெற்றது. இசை, பரதத் துறைகளுக்கென 22 மாணவர் தெரிவு செய்யப்பட்டனர். பரத நாட்டியத் துறைக்கு 9 பேரும், இசைத்துறைக்கு 13 பேரும் தெரிவாகி உள்ளமை குறிப் பிடத்தக்கது.

## கீதை சொல்லும் வாழ்க்கை

கோயம்புத்தூர் சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி தர்மேஷ் சைதன்யா அவர்கள், ஜனவரி மாதம் 9ம் திகதி 'கீதை சொல்லும் வாழ்க்கை' எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இச்சொற்பொழிவுக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமை வகித்தார். இந்து சமயப் பேருரைத் தொடரின் 54வது பேருரை இதுவாகும்.

பிரம்மச்சாரி தர்மேஷ் சைதன்யா கோயம்புத்தூர், சிறுவாணி எனும் இடத்தில் அமைந்துள்ள சின்மயா மிஷன் அமைப்பான சாந்திபணியில் அருட்பணிகள் ஆற்றிவருபவர். சுவாமி சின்மயாநந்தா அவர்களின் தலைமையில், பிரம்மச்சாரி பயிற்சி, வேதாந்த வகுப்புகள், கிராமத்தவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சி என்பன இங்கு நடைபெறுகின்றன.

## சமூகத்தில் ஒரு துறவியின் பங்கு

திருகோணமலை சிவயோக சமாஜ ஸ்தாபகர் சுவாமி கங்காதரானந்தா



'அவரவர் இஷ்டம்' எனுந் தலைப்பில் இடம்பெற்ற கவியரங்கில் கவிஞர் அம்பி அவர்கள் கவிதை வாசிப்பதையும், கலந்துகொண்ட கவிஞர்களான திருமதி இளந்தேவன், கவிஞர் இளந்தேவன், கலாநிதி நடராசன், சில்லையூர் செல்வராசன் ஆகியோரையும் கூட்டத்தில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

அபிப்பிராயம் கொடுப்பதை விட அபிப்பிராயம் கேட்பது நல்லது.

### பக்தன்

எவன் சித்தம் முற்றும் அமைதியாக இருக்கிறானோ, எவன் எல்லோரிடமும் மிருதுவாயும், இனிமையாகவும் நடக்கிறானோ, எவன் இந்திரியங்களை வென்று விட்டானோ, மனம், மொழி, மெய்களினால் எவரிடத்திலும் பகை இல்லாது எவன் இருக்கின்றானோ, எவன் மனம் கருணையினால் உருகி ஒடுகிறதோ, எவன் திருட்டு, வன்முறைச் செயல்கள் ஆகியவற்றில் இருந்து எப்போதும் விலகி இருக்கிறானோ, நற்குணங்களையே விரும்புகிறவனாய் பிறர் நன்மைக்கு உதவும் காரியங்களில் எவன் ஈடுபடுகிறானோ, எவனது வாழ்க்கை நல்ல காரியங்களையே செய்வதனால் தூய்மையுற்றிருக்கிறதோ, எவன் பிறர் மகிழ்வதைக் கண்டு தான் மகிழ்கிறானோ, எல்லா உயிர்களிடத்தும் கடவுள் இருப்பதை உணர்வதனால், எவன் எவரிடமும் பொறாமையோ, பகைமையோ கொள்வதில்லையோ, ஏழை, எளியவர்க்கு இரங்குவது எவனுடைய இயல்பாகி விட்டதோ, எவன் பிறர்க்கு உதவுவதிலேயே கருத்தாய் இருக்கிறானோ, எவன் பிறரிடமுள்ள குணங்களைக் கண்டு மகிழ்ந்து, பிறர் குறைகளைக் கருதாமல் இருக்க விரும்புகிறானோ, எப்பொழுதும் கடவுளிடமே தன் உள்ளத்தை செலுத்தி எவன் இனிய மொழியே பேசுகிறானோ அவனே உண்மையான பக்தனுக்குரிய இலட்சணங்கள் பொருந்தியவனாவான்.

அவர்களில் ஞாபகார்த்தச் சொற்பொழிவு **பெப்ரவரி மாதம் 16ம் திகதி** திணைக்களக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள் "சமூகத்தில் ஒரு துறவியின் பங்கு" எனுந் தலைப்பில் நினைவுரை நிகழ்த்தினார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் திரு. கே. பாலகிட்ணர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்து உரையாற்றினார்.

சட்டத்தரணி செல்வி. சஹாஜா எம். திவுல்வெவ வரவேற்புரையும், இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் திரு. எம். பி. எம். ஜலீல் நன்றியுரையும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்ச்சியை திணைக்களமும் சிவயோக சமாஜ பக்தர்களும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிவராத்திரிப் பூஜை

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு ஒழுங்கு செய்திருந்த சிவராத்திரி பூஜை நிகழ்ச்சிகள் **பிப்ரவரி 19ம் திகதி** சிலாபம் ஸ்ரீ முன்னைநாதர் ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்றன. இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். தமிழகச் சொற்பொழிவாளர் திருப்புகழ்ச் செல்வர் மதிவண்ணனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்றது. நிகழ்ச்சிகளை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடி அஞ்சல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## கவியரங்கு

புதிய பாணியில் அமைந்த 'கவியரங்கு' நிகழ்வொன்று **பெப்ரவரி மாதம் 24ம் திகதி மாலை** திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சத்தியமும் இரக்கமும், தபசும், ஈகையும் தர்மத்துக்குக் கால்கள் ஆகின்றன.

''அவரவர் இஷ்டம்'' என்னும் தலைப்பில் இடம்பெற்ற இக்கவியமர்வில் தமிழகக் கவியரசர் இளந்தேவன் நாவற்குழியூர் கே. என். நடராசன், சில்லையூர் செல்வராசன், இ. அம்பிகைபாகன், திருமதி சந்திரகாந்தி இளந்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் நிகழ்ச்சிக்கு பிரதம அதியாகக் கலந்து சிறப்பித்தார்.

தமிழகத்தின் முன்னணிக் கவிஞர்களுள் ஒருவரான கவிஞர் இளந்தேவன் அமைச்சர் அவர்களின் அழைப்பை ஏற்று திருகோணமலை பொங்கல் விழாவிற் கலந்துகொள்ள இலங்கை வந்தார். திருமலையிலும், கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டிய, பண்டாரவளை, நுவரெலிய, கொட்டகலை ஆகிய இடங்களிலும் கொழும்பின் பல பாடசாலைகள், இந்து ஆலயங்களிலும் இவர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

## இலக்கியப்பட்டிமன்றம்

மார்ச் மாதம் 14ம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் ''கற்பனைத் தேரோட்டுங் கவிஞர்கள் குற்றவாளிகளா'' எனும் தலைப்பில் புதுமையான பட்டிமன்றம் ஒன்று இடம்பெற்றது.

### தட்சிணாமூர்த்தி

சிவபெருமான் தென்திசை நோக்கிய நிலையில் அமர்ந்து அருள் பாலிப்பதால் தட்சிணாமூர்த்தி எனப்பெயர் வழங்கலாயிற்று. தட்சணம் - என்ற சொல்லுக்கு ஞானம் என ஒரு பொருளும் உண்டு. தன்னை வழிபடுவோருக்கு ஞானத்தை வாரி வழங்குவதால் தட்சிணாமூர்த்தி எனப்பெயர் பெற்றார் எனவுங் கூறுவர். ஆலயத்தில் கருவறையின் தென்புறச் சுவற்றின் ஒருமாடத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளி இருப்பார். கல்லால மரநிழலில் புலித்தோல் ஆசனத்தில் தட்சிணாமூர்த்தி அமர்ந்திருப்பார். நான்கு தோள்களும், மூன்று கண்களும் உடையவராகக் காட்சி தருவார். அவரது வலது கையில் ருத்திராட்ச மாலையும், இடக்கையில் தீ அல்லது நாகமும் காட்சிதரும். தட்சிணாமூர்த்தியை ஞானமூர்த்தி எனவும் மக்கள் வழிபடுகின்றனர்.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இப்பட்டிமன்றத்தில் தமிழகத்தின் இலக்கியத் தம்பதி எனப் புகழ்பெற்ற டாக்டர் பூ. சொல்விளங்கும் பெருமாள்,



பட்டிமன்ற நிகழ்ச்சியில் தமிழக இலக்கியத் தம்பதியரான டாக்டர் சொல்விளங்கும் பெருமாள், டாக்டர் சக்தி பெருமாள், இருவரும் உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

சுயநலத்தைப் பொதுநலத்துக்கென மகிழ்வுடன் விட்டுக்கொடுப்பவன் மேன்மகன்.

டாக்டர் திருமதி சக்தி பெருமாள் இரு வரும் கலந்துகொண்டு சிறப்பாக வாதம் புரிந்தனர். நிகழ்ச்சி ஜனரஞ்சகமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்துப்பேருரை

திணைக்களம் நடாத்தும் இந்துப் பேருரைத் தொடரின் 55வது சொற் பொழிவு மார்ச் மாதம் 4ம் திகதி திணைக் களக் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

அமைச்சின் செயலாளர் திரு. கா. தயாபரன் அவர்கள் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்ச்சியில் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலைய மலேஷிய இணைப் பதிகாரி திரு. வி. கே. ஜோதிராஜா ''பரஸ்பர உறவுமுறைக்கு தியான மார்க்கம்'' எனும் தலைப்பில் ஆங்கி லத்தில் உரை நிகழ்த்தினார்.

## ஞானத்தமிழ்

திணைக்களப் பேருரைத் தொடரின் 56வது பேருரை மார்ச் மாதம் 23ம் திகதி மாலை திணைக்களக் கேட்போர் கூடத் தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவ ராஜ் அவர்களின் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழக சொற் பொழிவாளரான திருப்புகழ்ச் செல்வர் மதிவண்ணன் அவர்கள் ''ஞானத் தமிழ்'' என்னும் தலைப்பில் உரைநிகழ்த்தினார்.

தமிழகத்தில் ஆன்மீக சொற்பொழி வாளராகத் திகழும் இவர் இளையபாரதி, கவிமாமணி ஆகிய பட்டங்களைப் பெற் றவர்.

இவரது சொற்பொழிவுகள் திருகோண மலை, வவுனியா, மாத்தளை, கண்டி, நாவலப்பிட்டி, பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்கள் உட் பட நாட்டின் பல பாகங்களிலும் கொழும் பில் பல ஆன்மீக அமைப்புக்களிலும் இடம்பெற்றன.

## வாரியார் ஒரு பல்கலைக்கழகம்

நாளும் இன்னிசையுடன் தமிழ் பரப்பும் பல்கலைக்கழகமாகிய வாரி யார் சுவாமிகள் 60 ஆண்டுக்காலத் தில் மேடையில் பேசாத நாளே இல்லை. எத்தனை தொலைவாக இருந்தாலும் குறித்த வண்ணம் எந்த வாகனமாக இருந்தாலும் தவறாது சென்று உரை நிகழ்த்தும் இயல்பினர்.

தாம் செய்துவரும் பூசையை எக்காரணம் கொண்டும் தவறாமல் கேதாரம், பத்திரிநாத், அமர்நாத் முதலிய எல்லா இடங்கள் சென்ற போதும் எடுத்துச்சென்று முறை யாகப் பூசைமுடித்த பின்னே உணவு செய்யும் முறையினர். சிவராத்திரி, மாதசஷ்டி போன்ற நாட்களில் எந்த ஆகாரமும் உட்கொள்ளாது விரதம் இருப்பவர்.

யார் கடிதம் எழுதினாலும் தவ றாமல் உடனுக்குடன் பதில் எழுது பவர். திருமண அழைப்போ விழா நிகழ்ச்சியோ வந்தால் ஒரு மணித் துளியில் ஒருவெண்பா எழுதி அஞ் சலட்டையில் அனுப்பி வைக்கும் இயல்பினர்.

பிரசங்கம் முடிந்து இரவு 12 மணி ஆனாலும் எத்தனைபேர் திருநீறு கேட்டாலும் முகமலர்ச்சியுடன் தந்து கொண்டே இருப்பார்.

அளவான உணவு, கட்டுப்பா டான வாழ்க்கை, ஆடம்பரமற்ற முறை, சோம்பல் இன்றி எந்நேர மும் தபால் எழுதுவது, வந்தவர் களிடம் பேசுவது, பேசிக்கொண்டி ருக்கும் போதே தபால்கள் பார்த் துப் பதில்கள் எழுதுவது, திருக் கோவில் திருப்பணி நன்கொடைக் காகச் செல்லும் இடங்களில் அவர் கள் உள்ளம் திருந்தி மனமகிழ்ச்சி யுடன் உதவுமாறு பேசுவது, உடம் பாலும் கண்களாலும் குறிப்பி னாலே மக்கள் உணரும்படி செய் வது, இப்படி எழுதிக்கொண்டேயி ருக்கலாம். இந்தப் பல்கலைக்கழ கத்துக்கு இணையாக வேறு எந்தப் பல்கலைக்கழகத்தைச் சொல்லுவது.

- தவத்திரு சுந்தர சுவாமிகள் -
கௌமார மடாலயத் தலைவர்

நன்றி-ஆத்மஜோதி

ஆறுதல் என்பதும், அமைதி என்பதும் அவரவர் உள்ளத்தில் ஒளிரும் மேதக்க மாண்புகளாகும்.

# இந்துசமயப் போட்டி 1992

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 6ம் திகதி 16 மாவட்டங்களில் இந்துசமயப் போட்டிகள் நடைபெற்றன. மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கிடையே அகில இலங்கை ரீதியிலான போட்டிகள் டிசம்பர் மாதம் 26ம் திகதி திணைக்களத்தில் நடைபெற்றன. இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் பட்டியல் இங்கே தரப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றோருக்கும் அகில இலங்கை மட்டத்தில் முதல் மூன்று இடங்கள் பெற்றோருக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும், டிசம்பர் 26ம் திகதி திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டன.

மாவட்ட மட்டத்தில் 2ம், 3ம் இடம் பெற்றோருக்கான பரிசில்கள் அவ்வவ் அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### அகில இலங்கை ரீதியில் வெற்றி பெற்றோர் விபரம்

**கட்டுரைப்போட்டி-மேற்பிரிவு**

| இல. | பெயர் | இடம் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 01. | செல்வி. கி. நளாயினி | 1ம் இடம் | சைவமகா சபை | கல்முனை |
| 02. | செல்வன். வே. கலைச் செல்வன் | 2ம் இடம் | நாவலர் அ/நெ/பா. இந்துமாமன்றம், ஓமந்தை | வவுனியா |
| 03. | செல்வி. வி. நாராயணி பிரியதர்சினி | 3ம் இடம் | சைவமுன்னேற்றச்சங்க நால்வர் அ/நெ/பா, | கொழும்பு |

**கட்டுரைப்போட்டி–மத்திய பிரிவு**

| இல. | பெயர் | இடம் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 04. | செல்வி. நா. மல்லிகா | 1ம் இடம் | வடிவாம்பிகா அறநெறிப் பாடசாலை, முன்னேஸ்வரம் | புத்தளம் |
| 05. | செல்வி. ஆர். சுபாவணி | 2ம் இடம் | கலஹா தமிழ் அ/நெ/பா | |
| 06. | செல்வன். மு.கிருஷாந்த் | 3ம் இடம் | இந்து இளைஞர் மன்றம், அ/நெ/பா, நீர்கொழும்பு | கொழும்பு |

**கட்டுரைப்போட்டி-கீழ்ப்பிரிவு**

| இல. | பெயர் | இடம் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 07. | செல்வன். ந. ஜெயசுஜன் | 1ம் இடம் | இராமகிருஷ்ண மிஷன், ஞாயிறு பாடசாலை, | |
| 08. | செல்வன். ந. சதீஸ்வரன் | 2ம் இடம் | சைவ மகா சபை | களுவாஞ்சிக்குடி |
| 09. | செல்வி. ந. உஷாநந்தினி | 3ம் இடம் | ஸ்ரீகதிரேசன் ஆலய அ/நெ/பா | குருணாகல் |

உடைமையும்வறுமையும் பொருளிலில்லை. அவரவர் படைத்துள்ள மனநிலையில் அவைகள்உள

### பண்ணிசைப் போட்டி-மேற்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | செல்வி. ச. தனலெட்சுமி | 1ம் இடம் | விபுலானந்த அ/நெ/பா, கொம்மாந்துறை | மட்டக்களப்பு |
| 11. | செல்வி. ச. தனலெட்சுமி | 2ம் இடம் | வடிவாம்பிகா முன்னேஸ்வரம் அ/நெ/பா, | புத்தளம் |
| 12. | செல்வன். கி. சுதர்சன் | 3ம் இடம் | இந்து இளைஞர் மன்ற அ/நெ/பா | கண்டி |

### மத்திய பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | செல்வி சி. மனோரஞ்சித புஸ்பமலர் | 1ம் இடம் | கதிரேசன் குமார வித்தியாலய, அ/நெ/பா, நாவலப்பிட்டி | கண்டி |
| 14. | செல்வி சி. தக்ஷிகா | 1ம் இடம் | இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலை | கொழும்பு |
| 15. | செல்வி க. வேணி | 3ம் இடம் | ஸ்ரீமகாமாரியம்மன் ஆலய அ/நெ/பா | மட்டக்களப்பு |

### கீழ்ப்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 16. | செல்வி தி. சந்திரவதனி | 1ம் இடம் | வடிவாம்பிகா அ/நெ/பா முன்னேஸ்வரம் | புத்தளம் |
| 17. | செல்விஇ.சாந்தலோஜினி | 2ம் இடம் | இந்துஇளைஞர்பேரவை, அ/நெ/பா | திருகோணமலை |
| 18. | செல்வன் ச.வித்தியாசங்கர் | 3 இடம் | இந்து கலாசார முத்தமிழ் அ/நெ/பா | கொழும்பு |

### பேச்சுப்போட்டி - மேற்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | செல்வன் நா.சுரேந்திரன் | 1ம் இடம் | ஸ்ரீமுத்துவிநாயகர் அ/நெ/பா | மாத்தளை |
| 20. | செல்வி இ. கலைவேணி | 2ம் இடம் | சைவமகாசபை, களுவாஞ்சிக்குடி | மட்டக்களப்பு |
| 21. | செல்வி. ஆ. மகேஸ்வரி | 3ம் இடம் | ஞானவாணி அ/நெ/பா ஹவுப்பை, காவத்தை | இரத்தினபுரி |

### மத்திய பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | செல்வன் பூ. சுரேந்திரா | 1ம் இடம் | பரமன் இந்து இளைஞர் மன்றம், ஆரையம்பதி | மட்டக்களப்பு |
| 23. | செல்வன் சி. சிவக்குமார் | 2ம் இடம் | ஸ்ரீபத்திரகாளியம்மன் அ/நெ/பா, கொத்தாந்தீவு | புத்தளம் |
| 24. | செல்வன் கோ. சுதாகரன் | 3ம் இடம் | இந்து இளைஞர் மன்ற அ/நெ/பா, நீர்கொழும்பு | கொழும்பு |

### கீழ்ப்பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 25. | செல்வன் ச.வித்தியாசங்கர் | 1ம் இடம் | இந்து கலாசார முத்தமிழ் மன்றம் | கொழும்பு |
| 26. | செல்வி இ. சிவப்பிரியா | 2ம் இடம் | தெய்வநெறிக் கழகம், கோட்டைக்கல்லாறு | மட்டக்களப்பு |
| 27. | செல்வி ச. ரஜனி | 3ம் இடம் | ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபை | வவுனியா |

பணிவுடையவனுக்கு நிரந்தர சாந்தி உண்டு. பின்பு தற்பெருமையுடையோனுக்கோ பொறாமையும் கோபமும் உண்டு.

# கோணேசர் குடமுழுக்கு

தொன்மைச் சிறப்பும், சரித்திரப் புகழும் நிறைந்த திருகோணமலை, மாதுமையாள் சமேத கோணேசர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் ஆங்கீரச வருடம் 20ம் நாள் (பெப்ரவரி 2ம் திகதி) மிகச் சிறப்பாக நடந்தேறியது.

பிரதிஷ்டா பூஷணம், சிவாச்சார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், சர்வசாதகம் சிவஸ்ரீ விஸ்வநாராயணசர்மா ஆகியோர் தலைமையில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த பிரதிஷ்டா சிரோன்மணிகள் குடமுழுக்குக் கிரியைகளை சிறப்புற நடாத்துவித்தனர். கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன், இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ், திருமதி தேவராஜ், அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர், திருமதி கீதா நித்தியானந்தன் வடகிழக்கு மாகாண சபை ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரட்ன, இராஜாங்கச் செயலாளர், திரு. கா. தயாபரன் திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், ஆராய்ச்சி அலுவலர், திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோர் உட்பட ஆலயபரிபாலனசபைத் தலைவர் திரு. கோ. செல்வராசா வடகிழக்கு மாகாண சபை உயரதிகாரிகள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

கொழும்பு, கண்டி உட்பட பல புகழ் பெற்ற ஆலயங்களின் அறங்காவலர்களும் குடமுழுக்குக் காண திருமலை சென்றிருந்தனர்.

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சின் அயராத முயற்சியினால்

சிறிய கருப்புப் புள்ளியொன்றை நடுவில் கொண்ட ஒரு அங்குல நீளம்கூட இல்லாத இந்த புறக்கண்ணே எண்ணற்ற கோடிக்கணக்கான மைல்கள் தொலைவுக்கு அப்பால் உள்ள நக்ஷத்திரங்களைக் காண முடிகிறது எனில் ஆன்மீக சக்தி வாய்ந்த அகக்கண் எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும்? இப்பேரண்டத்தின் வெளியே தெரியாத பல நுண்ணிய பொருள்களை எத்துணை ஆழம் நுழைந்து காண இயலும் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள். அத்தகைய அகக்கண்ணைப் பெறப் பேரவா கொள்க.

*                    *

காமம், குரோதம், லோபம், அசூயை, (சிற்றின்பம் உட்பகை, பேராசை, பொறாமை) எனப்படுகிற நான்கு திருடர்கள் சரீரம் என்கிற அறையில் இருதய பீடத்தின் மீது மிக இரகசியமாகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள ஞானரத்தினங்களை அபகரிக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். சரியான சமயத்தை அறிந்து சர்வ இரட்சகரான சர்வேஸ்வரனை வழிபட்டு, ஞானச்செல்வத்தை நிலைபெறச் செய்ய வேண்டும். அன்புச் செல்வத்தை அடைய முயலுங்கள்.

— சத்திய சாயி பாபா

ஆத்திரக்காரன் ஒருபொழுதும் வெற்றியடையான்.

தொடங்கப்பட்ட இப்பணிக்கு, ஜனாதிபதி அவர்களின் நிதியத்திலிருந்து ஐந்து லட்சம் ருபாவை மேதகு ஜனாதிபதி அவர்கள் வழங்கி இருந்தார். அத்துடன் புனருத்தாரண வேலைகளுக்காக, கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம், சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், மயூராப் பிளேஸ் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், செக்கட்டித்தெரு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், முகத்துவாரம் ஸ்ரீ சித்தி விநாயர் ஆலயம், கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம் ஆகியவற்றின் அறங்காவலர் சபைகளும் வர்த்தகப் பிரமுகர்களும் நிதியுதவி அளித்திருந்தனர்.

கோவில் புனரமைப்பு வேலைகளை பிரபல ஸ்தபதி திரு எஸ். எஸ். மகேஸ்

## ஆன்மீகத் தெளிவு

கேள்வி: கோயில்களில் தேங்காய் உடைப்பதன் தத்துவம் என்ன? சிதறுகாய் உடைப்பதன் பொருள் என்ன? தத்துவ அடிப்படையில் இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

சுவாமிகள்: ஆன்மாக்காளாகிய நமக்கு மூன்று மலங்கள் இருக்கின்றன. அவை ஆணவம், கன்மம் மற்றும் மாயை என்பதாகும். தேங்காயின் மேலேயுள்ள பச்சைமட்டை மாயா மலம், உரித்து எடுக்கின்ற ஒடு ஆணவ மலம், இந்த மூன்றும் அகன்றால் சித்தசுத்தி என்ற வெண் பருப்பு தோன்றுகிறது.

சிதறுகாய் உடைக்கும் போது இம் மலங்களால் ஏற்படும் விளைவுகளை அகற்றிவிடுவாய் இறைவா என்றுவேண்டி தூள் தூளாக உடைத்து விடுகிறோம்.

கேள்வி: துறவிகளான ஆச்சாரிய புருஷர்களுக்குச் கனகாபிஷேகம் வெள்ளிக் காசுகளால் பாதபூஜை ஆகியவற்றை செய்வது பொருந்துமா?

சுவாமிகள்: இறைவனுக்கு எதுவுமே அவசியமில்லை. விருப்பு-வெறுப்பில்லாத ஈசனுக்குப் பொன்மாலையும் பட்டுப் பீதாம்பரமும் அவசியமில்லை. அது போல் இறைவனடியார்களுக்கும் இம்மாதிரியான பொருட்களில் எவ்விதமான பற்றும் கிடையாது. அவர்களும் விரும்புவதில்லை.

குழந்தைகளுக்கு நாம் அலங்காரம் செய்து பார்த்து மகிழ்கிறோம். அதுபோல இறைவனடியார்களை நாம் இறைவனை வணங்குவது போலவே வணங்குவதால் அவர்களுக்குக் கனகாபிஷேகம் மற்றும் பாத பூஜை செய்து நாம் நன்மை பெற வேண்டுகிறோம்.

கேள்வி: தியானம் செய்யும்போது குறுக்கே பிற எண்ணங்கள் வருவதைத் தடுப்பது எப்படி? அப்படி ஒருமுகப்படுத்த இயலாத தியானத்தால் ஓளவாவது பலன் கிடைக்குமா?

சுவாமிகள்: மனதை ஒருமுகப்படுத்துவது என்பது சாமான்ய காரியமல்ல. நீண்ட பயிற்சிக்குப் பின்பு பல எண்ணங்கள் வருவதைத் தடுத்து ஒரு எண்ணம் மட்டும், ஈசனின் நினைவு மட்டும் இருப்பதற்கான நிலையை அடையவேண்டும்.

ஒருமுகப்படுத்த முடியாத நிலையிலும் நாம் அவ்வப்போது ஈசனைத் தியானம் செய்த முயற்சிகளுக்குக்கூட ஓரளவு பலன் இருக்கத்தான் செய்யும். காலப்போக்கில் நம் மனம் கட்டுக்கடங்கிவிடும். அப்போது தியான நிலை அமைதியைத் தரும்.

— திருமுருக கிருபானந்தவாரியார்

உனக்குப் பிடியாததைப் பிறர்க்கு எடுத்து வழங்காதே.

வரன் அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார். குடமுழுக்கினை ஒட்டி, திருமலை ஆலய பரிபாலன சபை, ஆலய புனருத்தாரண சபை, இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு என்பன இணைந்து கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட்டன.

கும்பாபிஷேகம் நிறைவுற்ற பின் தொடர்ந்து நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற உள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22ம் திகதி பாபநாசச்சுனையில் கோணேசர் தீர்த்தோற்சவ வைபவம் இடம்பெறும்.

கோணேசர் ஆலய கும்பாபிஷேகம், அமைச்சினதும், பக்தர்களினதும் பெரும் முயற்சியால் சிறப்புற நிகழ்ந்தமை, இறையருள் பெருக்கும் ஒருதெய்வீகத் திருப்பணி ஆகும்.

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு; உலகில் உனக்கினிய தெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாகநினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும் போதும், நிற்கும் போதும் நடக்கும் போதும், கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும், தசையிலும், இரத்தத்திலும், தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அது வாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவனுடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

—யோகர் சுவாமிகள்

பிறரைப் பார்த்து நாமும் அதே போலச் செய்ய முற்படுவது நமக்கென்று ஒரு கலாசாரத்தை ஒரு நாளும் தராது. அது நம்மைத் தவறான பாதையில் அழைத்துச் செல்லும். சில வசதிகள் கிடைக்கலாம். ஆனால் கட்டுப்பாடும் நேர்மையும் குலைந்து போகும். நம்மை நாமே உயர்த்திக் கொள்வது, பிறர் நம்மை கைதூக்கி விடுவதை விட எவ்வளவோ மேலானது. நாம் செய்த சாதனைகளை நினைத்துப் பார்ப்போம். அதில் நாம் வெட்கித் தலை குனிய எதுவுமே இல்லை. நமது முன்னோர்களை, பெரியோர்களை, ஞானாசிரியர்களை நாம் எண்ணிப் பார்த்து மரியாதை செய்வதால் நாம் உயருவோம். ஒரு நாளும் தாழ்ந்து போக மாட்டோம். நமது மண் ஞானபூமியின் மண். இங்கே வாழ்ந்தவர்கள் சீலம் மிகுந்தவர்கள். அவர்கள் அமைத்துக் கொடுத்த கட்டுப்பாடுகள் நம்மை மேன்மேலும் உயர்த்தும். நமது குழந்தைகளை அந்தவழியில் அழைத்துச் செல்லுவது நம்முடைய கடமை.

— பகவான் சத்ய சாயிபாபா

★ ★ ★

சிவன்ராத்திரி, வைகுண்ட ஏகாதசி, போன்ற விசேஷ நாட்களில் உபவாசமிருந்து கடவுள் வழிபாட்டில் செலவிட வேண்டும் என்பது நமது சாஸ்திரங்களின் கட்டளையாகும். ஆனால் இன்று கடவுள் வழிபாட்டை விட்டுவிட்டு சீட்டாடுதல், சொக்கட்டான் ஆடுதல், சினிமா பார்த்தல் இத்தகைய பொழுதுபோக்குகளில் இரவைக் கழித்து விழித்திருக்கிறார்கள். அறிவீனன் - பலவீனன் எப்பொழுதும் எத்தகைய புனிதமான சம்பிரதாயங்களையும் இங்ஙனம் மாசுபடுத்தி விடுகிறான் என்பதற்கு இவைகள் சான்றாகும். மத சம்பிரதாயங்கள் பல இங்ஙனம் அர்த்தமற்ற சமயப் பழக்கங்கள் ஆகிவிட்டன.

– சுவாமி சித்பவாநந்தா

கடவுள் ஒருவரைத் தவிர ஏனைய யாவும் மதிப்பற்றவைகளாம்.

ஆலய வலம்

## சித்திரத்தேர்ப்பவனிகண்ட

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

— திருமதி. தவமணிதேவி மோகனசுந்தரம் —
இறத்தொட்டை.

**மா**த்தளை நகர் மலையகத்தின் எழில் மிக்க நகரங்களுள் ஒன்று. வடக்கு நோக்கி அமைந்துள்ள சரித்திரப் புகழ்மிக்க நகரங்களான தம்புல்ல, சிகிரியா, அநுராதபுரம், பொலன்னறுவை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களின் நுழைவாயிலாக மாத்தளை நகர் அமைந்துள்ளது.

இங்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், தென்னை மரங்கள் சூழ்ந்த ஒரு அழகிய சூழலில் அமைந்துள்ளது. இவ்வாலயம், இலங்கையின் சக்திபீடங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் ஆலயமாகும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் கருப்பண்ணசாமி எனும் அன்பரால் இந்த அம்மன் ஆலயம் தோற்றுவிக்கப்பட்டது என ஆலயச்சான்றுகள் குறிப்பிடுகின்றன. அந்நாளில் இருந்து மலையகத்தில் வாழ்ந்த இந்து மக்களும், யாழ்ப்பாணத்திலிருந்து வியாபார நோக்கம் கருதி வந்த இந்து மக்களும் ஒன்றுகூடி அம்மன் ஆலயத்தில் வழிபாடியற்றிவந்துள்ளனர்.

கருப்பண்ணசாமி அவர்களைத் தொடர்ந்து அவரது சீடரான திரு. சுப்பாப்பிள்ளை அவர்களின் காலத்திலேயே சிறியதொரு கட்டிடம் அமைக்கப்பட்டதோடு அர்ச்சகர் நியமிக்கப்பட்டு முறையான பூஜை வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. காலப்போக்கில் விழாக்கள், இரதோற்சவங்கள் என்பனவும் வழக்கில் வந்தன.

ஆலயத்தின் மூலமூர்த்தியாக அன்னை முத்துமாரி விளங்குகின்றாள். தலவிருட்சமாக வில்வமரம் போற்றப்பட்டு வந்துள்

### பிச்சை

சுவாமி விவேகானந்தர் வெளிநாடு சென்றிருந்தபோது ஹரிபாத மித்ரர் எனும் அன்பர் வீட்டில் தங்கி இருந்தார். அறிவியல் ரீதியில் சிந்திக்கின்ற அந்த அன்பர், ''சுவாமிஜி, பிச்சைக்காரர்களுக்கு காசு கொடுப்பது நல்ல செயலா? அதனால் அவர்கள் மேலும் மேலும் பிச்சை எடுக்கவே விரும்புவார்கள். தீயவழிகளில் செல்வார்கள். இது சரியா?'' என வினவினார். சுவாமிஜி புன்னகையோடு,

''அன்பரே நீங்கள், ஒருவன் பிச்சை கேட்கும்போது உங்களால் முடிந்த சிறியளவு பணத்தையே கொடுப்பீர்கள். காசைக் கொடுத்த பின் அதை அவன் நல்லவிதமாகச் செலவுசெய்கிறானா அல்லது வீண் செலவு செய்கிறானா என ஏன் கவலைப்படவேண்டும்? நீங்கள் கொடுக்காவிட்டால் அவன் திருடக்கூடும். அதைவிட உங்களால் ஒரு சிறிய அறம் ஆற்ற முடிந்ததே என மகிழுங்கள்'' என பதிலளித்தார்.

தீய எண்ணங்களை உடலில் உள்ள நோய்க்கிருமிகளோடு ஒப்பிடலாம்.

ளது. 1958ம் ஆண்டு நிகழ்ந்த திருப்பணிகளின் விளைவாக ஆலயம் புனரமைக்கப்பட்டதோடு, விநாயகர், சுப்பிரமணியர், ஸ்ரீ முத்துமீனாட்சி, நடராஜர் ஆகிய மூர்த்தங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. தெய்வீகச் சிற்பங்கள் நிறைந்ததாக வசந்த மண்டபம் அழகுற அமைக்கப்பட்டது. வசந்த மண்டபத்தின் முன்னே கொடிமரம் அமைந்துள்ளது.

இயல்பாகவே இயற்கையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்குமானால், அப்போதுங்கூட அனைவருக்கும் சமமான வாய்ப்பு வசதிகள் இருக்கத்தான் வேண்டும். அல்லது ஒரு சிலருக்கு அதிகமாகவும், மற்றும் சிலருக்குக் குறைவாகவும்தான் வாய்ப்பு வசதிகள் அமைந்திருக்கும் என்றால், வலிமையுள்ளவர்களுக்குத் தருவதைவிட, பலவீனமானவர்களுக்குத் தான் அதிக அளவில் வாய்ப்புக்கள் தரப்பட வேண்டும். இதையே வேறுவிதமாகச் சொல்வதென்றால், சண்டாளன் ஒருவனுக்குத் தேவையான அளவிற்குப் பிராமணன் ஒருவனுக்குக் கல்வி தேவையில்லை. பிராமணனுடைய மகனுக்கு ஓர் ஆசிரியர் தேவைப்பட்டால், சண்டாளனுடைய மகனுக்குப் பத்து ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள். யார் ஒருவனுக்குப் பிறவியிலேயே இயற்கை கூரிய அறிவாற்றலைத் தரவில்லையோ, அத்தகையவனுக்குத்தான் பெருமளவிற்கு உதவிகள் கொடுக்கப்படவேண்டும். திறமையுள்ளவனுக்கே மீண்டும் உதவி செய்பவன், கொல்லன் வீதியில் ஊசியை விற்கும் பைத்தியக்காரனைப் போன்றவன். ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவில்லாதவர்கள் ஆகிய இவர்களே உன்னுடைய தெய்வங்களாக விளங்கட்டும்.

—சுவாமி விவேகானந்தர்

சமயத்தை ஜால வித்தைகளின் விளையாட்டரங்கமாய் மாற்றுகின்றவர்கள் கடவுளைக் கேலியும் பண்டலும் செய்வதாகவே முடியும். சித்துக்கும் ஜாலத்திற்கும் வித்தியாசம் தெரியாத பாமர பக்த ஜனங்கள், கண்கட்டு வித்தைகளைக் காட்டிச் சித்தர்போல் நடித்துத் திரிபவர்களிடம் விழிப்பாயிருக்கவும்.

சித்து, வித்தை, ஜாலம் இம்மூன்றும் மூன்று கோணத்திலிருப்பவை. வித்தைகள் மருந்து தேவதா உபாசனைகளால் நிகழ்த்துபவை. ஜாலம் கையடக்கம் மெய்பக்கத்தால் செய்பவை. இவை வெறும் வினோதங்களே தவிரக் கடவுட்காரியமல்ல. சித்து என்பது முற்றிய ஞானிகளிடத்திலிருந்து, சந்தர்ப்பானுகரணம் இயற்கையாகவே நிகழ்ந்து கொண்டிருப்பவை.

— சுவாமி கங்காதரானந்தா —

இவ்வாலயத்திற்கே உரிய பெருமையான பஞ்சரதங்கள் 1965ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டன. அதன் பின் ஆண்டுதோறும் மாத்தளை நகர் வீதிகளில் பஞ்சரதப் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாகும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ஆ. தம்பித்துரை என்ற சிற்ப நிபுணரின் தலைமையில் 1977-ம் ஆண்டு சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. இக்காலத்தில் திரு. க. குமாரசுவாமி அவர்கள் ஆலய பரிபாலன சபைத் தலைவராகத் திகழ்ந்தார்.

1983-ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களின்போது சித்திரத்தேர் தீக்கிரையானது. அத்துடன் வருடந்தோறும்

நடைபெற்று வந்த பஞ்சரதப்பவனியும் ஸ்தம்பிதமடைந்தது.

மீண்டும் ஆலயம் புதுப்பொலிவு பெறவும், பழைய பெருமை நிலை பெறவும் 1984ம் ஆண்டுக்குப் பின்பு ஆலய பரிபாலனத்தைப் பொறுப்பேற்ற திரு. எம். இராஜரட்ணம், அவர்களின் அரும்பணி போற்றுதற்குரியதாகும். ஆலயத்தை மீளமைப்பதில் திரு. இராஜரட்ணம் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். வருடாந்த உற்சவங்கள் முறைப்படி நடந்தேறின. மாசிமகத் திருவிழா சிறப்புடன் நடந்தேறியது. எனினும் மாத்தளை நகர வீதிகளில் பஞ்சரதப் பவனி காணாமை பக்தர்களின் பெருங்குறையாக இருந்தது.

1992-ம் ஆண்டு, ஆலய பரிபாலனத் தலைவராக திரு. த. மாரிமுத்துச் செட்டியார் அவர்கள் பொறுப்பேற்றார். தமது காலத்தில் சித்திரத் தேர் அமைத்து வெளிவீதி வரச்செய்ய வேண்டும் என்ற உறுதியுடன் அவர் செயல்பட்டார். ஆலய பரிபாலன சபையும், மாத்தளை இந்து இளைஞர் மன்றமும் இணைந்து செயற்பட்டன, இவர்களின் அயராத உழைப்பும் பக்தர்களின் ஆர்வமும், நிதி மிருந்தோரின் வள்ளன்மையும் சேர்ந்து சித்திரத் தேர் எழில் வடிவம் பெற்றது.

பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சித்திர தேரின் வெள்ளோட்டம் இவ்வாண்டு மார்ச் மாதம் 5-ம் திகதி இடம் பெற்றது. அன்னையின் அருட் கடாட்சத்தால் 7ம் திகதி பஞ்சரத பவனியும் இடம் பெற்றது.

காஞ்சிகாமகோடி பீடாதிபதி, வாரியார் சுவாமிகள் போன்ற பல அருட்குரவர்களின் ஆசிகளோடும், இந்நாட்டின் தலைவர், அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடும், பஞ்சத் தேருலா நிகழ்ந்தது கண்டு பல்லாயிரம் பக்தர்கள் மெய்ம்மறந்து நின்றனர்.

இவ்வாலயத்திற்கு ஞானியர், சித்தர் பெருமக்கள், ஆன்மீக அருளாளர்கள் பலர் விஜயம் செய்துள்ளனர். ஞானியர் பார்வை பட்ட இடமெல்லாம் புண்ணியப்பேறு நிறைந்தவை, அந்தப் புண்ணியப்பேறு அன்னையின் அருள்மழையாய் இன்று பொழிந்து கொண்டிருக்கின்றது. என்றும் பொழிந்து கொண்டிருக்கும்.

நாகரீக முன்னேற்றம், விஞ்ஞானம் இவைகளைப் பற்றி நாம் கூடுதலாகப் பேசி பெருமைப்படுகின்றோம். என்ன முன்னேற்றங்கள் இருந்த பொழுதிலும் அவை ஆரோக்கியகரமாக வளராவிட்டால் சமுதாயத்தில் எத்தகைய சுகமும் அமைதியும் கொடுக்கக் கூடியதன்று. காரியங்களை ஊன்றி நினைத்தால் மாரடைப்பு வருமளவுக்கு மனிதனும், மனித சமுதாயமும் பலவீனமடைந்து வருகின்றது. இவைகளை மாற்றி அமைப்பதற்கு மிகவும் சக்தி வாய்ந்த ஒரு தார்மீக இயக்கம் தேவைப்படுகின்றது. உணவினால் மாத்திரம் உயிர்வாழ்வது வாழ்வன்று. நன்றாக வாழ்வதற்கும், நெறியுடன் இறப்பதற்கும் ஒரு சிறந்த இலட்சியமும் நம்பிக்கையும் இருக்க வேண்டும். அதில்லாமல் இருந்தால் மனிதன் திக்குத் திசை தெரியாமல் தடுமாறித் திரிவான். வாழ்க்கையின் தாளம் பிழைக்கும்.

—ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா

அவரவர் தகுதிக்கு ஏற்ப அவரவர்க்கு அருளோ அல்லது பொருளோ வாய்க்கிறது.

# சித்திரைப் புதுவருடம்

★ திருமதி. சாந்தி நாவுக்கரசன்
( பிரதிப்பணிப்பாளர் – இந்துசமயத் திணைக்களம் )

இந்து, தமிழ்ப் புதுவருடம் சித்திரை மாதத்தில் ஆரம்பமாகின்றது. மேட இராசியிலிருந்து மீன இராசிவரை பன்னிரு இராசிகளிலும் சூரியன் சஞ்சரிக்கும் காலங்களை ஒவ்வொரு சூரிய மாதங்களாகக் கணக்கிட்டு சித்திரை முதல் பங்குனி வரை பன்னிரண்டு மாதங்கள் கொண்ட வருடத்தைக் கொள்வது எமது மரபு.

மேட இராசியை இந்துக்கள் முதல் இராசியாகக் கொள்வதால் இந்த இராசியில் சூரியன் பிரவேசிக்கும் சுபவேளை புது வருடப்பிறப்பாகக்கொள்ளப்படுகிறது. சூரியனின் சொந்த வீட்டுக்குள் பிரவேசிக்கும் மாதமான ஆவணி மாதத்தில் புதுவருட அமைப்பில் மேடத்தை முதன்மைப்படுத்தி சூரியனை கிரகங்களின் தலைவனாகக் கொண்டதால் முதன்மையான இராசியில் கிரகத் தலைவனும் சொந்த வீட்டவனுமான சூரியன் புகும் பொன்னாளே நாம் கொண்டாடும் புதுவருடப் பிறப்பு தினமாகும்.

புதுவருடம் பிறக்கும் நேரம், நற்காரியங்கள் செய்வதற்குரிய சுபநேரம் என்பவற்றை நோக்குவோம். தமிழ் வாக்கியபஞ்சாங்கக் கணிப்பிலிருந்து பெறப்பட்டதை அடிப்படையாகக்கொண்டுநோக்குவோம். பிறக்கப்போகும் புதுவருடம், ஸ்ரீமுக புது வருடம்என்றபெயரைக்கொண்டு விளங்கப் போகின்றது. 13-4-93 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணி 47 நிமிடத்தில் அட்டமித் திதி பூராட நட்சத்திரம், துலாலக்கினம், விருட்சக இராசி கொண்ட சுபவேளையில் ஸ்ரீமுக வருடம் பிறக்கின்றது.

13-4-93 செவ்வாய்க்கிழமை பி. ப. 3 மணி 47 நிமிடம் தொடங்கி இரவு 9மணி 15 நிமிடம் வரை விசேட புண்ணிய கால

> குழந்தைகள் நல்ல பழக்கவழக்கங்களை எப்படிக் கற்றுக் கொள்கின்றன? பெற்றோர் அவ்வாறு நடந்து கொள்வதைப் பார்த்துத் தானே? காலையில் எழுந்து குளித்ததும் தோத்திரப்பாடல்களைப் பாடச் செய்யுங்கள். மனம் நல்வழிப் படும். இதைக் கட்டாயமாகச் செய்யச் சொல்லுங்கள். மாலையில் உட்கார்ந்து பெரிய வர்களிடம் நல்ல விஷயங்களைக் கேட்கச் செய்யுங்கள். அதில் குழந்தைகளின் பொது அறிவும் விருத்தியாகும். முதலில் நல்ல அறிவு வளரவேண்டும். பிறகு அந்தப் பண்பட்ட மனதில் ஆன்மிக நெறியும் வளரும். வாழ்க்கையில் சிரமப்பட்டுத்தான் முன்னேற வேண்டும். தியாக உணர்வுடன் உழைத்துத் தான் முன்னேற வேண்டும். இதைக் குழந்தைகள் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டும். இதை ஒரு தாயைக் காட்டிலும் தந்தையே கண்டிப்பாகச் செய்ய வேண்டும். நல்ல பண்புகள், பெரியோரிடம் மரியாதையுடன் நடந்து கொள்வது, நல்ல வார்த்தைகளையே பேசுவது, முரட்டுத்தனமாகப் பழகுவதைக் கைவிடுவது ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.
>
> – சுவாமி அமிர்தானந்தாஜி

உயர்நிலை உனக்கு எட்டாது என்று எண்ணிக்கொண்டு கீழ்மையில் கருத்தைச்செலுத்தாதே.

மாகும். மருத்து நீர் தேய்த்தல், நீராடல், புத்தாடை தரித்தல், சுவாமி தரிசனம், பொங்கல் விருந்து, கைவிசேடம் போன்ற சுபகருமங்களைச் செய்வதற்கு இது ஏற்ற காலமாகும். செம்பட்டு அல்லது சிவப்புக் கரை அமைந்த ஆடைகள் புதுவருடப் பிறப்பிலன்று அணிவது சிறப்பைத்தரும்.

அதிகாலையில் எழுந்து மருத்து நீர் தேய்த்து நீராடிப் புத்தாடைகள் அணிந்து

> எதிலும் எல்லா உயிர்களிடத்தும் இறைவனைக் காண்பதே நமது தர்மம் ஆகும். மனப் பக்குவம் பெற்ற பெரியோர்கள் மனதை இவ்வாறு பண்படுத்திக் கொள்கிறார்கள். தொடர்ந்து அவர்கள் செய்யும் தொண்டுகளை இறைவன்பால் ஈடுபாடு கொண்டே செய்கிறார்கள். மேலும் மனம் பண்பாடு அடைந்த நிலையில் மிகுந்த சுறுசுறுப்புடனும் விழிப்புடனும் வேலைகளில் ஈடுபட முடிகிறது. மனதில் குறுக்கீடுகளோ, வழி தடுமாறுவதோ இல்லாமல் அவர்கள் நிறையப் பணிகளில் ஈடுபட இயலும். அதனாலேயே அவர்கள் இத்தகைய தொண்டுகளில் மனித சமூகத்துக்குச் செய்யும் சேவையாக எடுத்துக் கொள்ளாமல் நாராயண சேவையாகவே மேற்கொண்டு ஈடுபடுகிறார்கள். மக்களுடைய பசிக்கு உணவு கொடுப்பதுதான் சேவை என்று நினைக்க வேண்டாம். மக்களுக்கு அறிவையும் ஆன்மிக உணர்வையும் வழங்குவதும் சேவைதான். அதுவே இறைவனுக்குச் செய்யும் சேவையும் ஆகும். நம்மைப் போன்றவர்களுக்கும்கூட ஆரம்பத்தில் இதனால் மனதின் ஈடுபாடு தடைப்பட்டாலும் போகப்போக மனதின் சக்தி அதிகரித்து சமூகப்பணிகளிலும் ஆன்மிக வழிகளிலும் இடையூறு இன்றி இயங்கமுடியும்.
>
> - சுவாமி அமிர்தானந்தாஜி

> ஆன்மீக வாழ்க்கை ஒரு மணமும் வண்ணமும் நிறைந்த மலர்த் தோட்டம்போன்றது. அது மிகஉயர்ந்த மன நிலைக்கு நம்மை கொண்டு சேர்க்கக் கூடியது. அப்படிப்பட்ட வாழ்க்கையில் ஆழ்ந்து விட்டால் குடும்ப வாழ்க்கை மணமில்லாமல் போய் விடும் என்று கருத வேண்டாம். குடும்ப வாழ்க்கைக்குரிய நியாயமான உணர்வுகளும், பற்றும் மறைந்து போய்விடும் என்று நினைக்க வேண்டாம். சிற்றின்பங்கள் மட்டுமே வாழ்க்கையில் பசுமையை அளிக்கக் கூடியவை என்று எண்ண வேண்டாம். ஆன்மிக வாழ்க்கையைச் சரியாகப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப வாழ்ந்தோமானால், வாழ்க்கை ஒரு மணம் நிறைந்த பூந்தோட்டமாகவே விளங்கும். அந்த மணம் எப்போதும் குறையாமலே இருக்கும். அந்தப் பூங்கா நமக்கு மட்டும் இனிமையாக இருப்பது அல்ல; பார்க்கும் அனைவரையுமே பரவசப்படுத்தக் கூடியதாக அமையும். நம்முடைய மலர்த்தோட்டம் போன்ற வாழ்க்கை பிறரையும் நம் வழியில் திரும்பி நடக்கச் செய்யும்.
>
> — சுவாமி சிரத்தானந்தா

ஆலயங்களுக்குச் சென்றும், இல்லத்திலே தீபமேற்றியும் இறைவழிபாடுகள் செய்து இத்தினத்தை மங்கலமாக ஆரம்பிக்கின்றோம். இதற்கேற்ற வகையில் முன் கூட்டியே வீடு வாசலையும், முற்றத்தையும் கூட்டிக் கழுவித் துப்புரவு செய்து மாக்கோலங்களாலும், மாவிலைகளாலும் அலங்கரித்துக்கொள்வது நமது வழக்கம். சிலர் சூரிய பொங்கல் பொங்குவதும் உண்டு.

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு

உன்னுடைய சுதந்திரம் பிறர்க்கு இடைஞ்சல் விளைவிக்குமானால் நீ அடைந்துள்ளது சுதந்திரமல்ல.

பால், கோசலம், கோமயம், கோரோசனை மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவைகளை சுத்தமான தண்ணீரில் இட்டுக் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். இது விசேட மருத்துவச் சிறப்பும், தோஷங்கள் பலவற்றை நீக்கும் தன்மையும் கொண்டதாகும். வீட்டில் காய்ச்சி எடுத்துக்கொள்ள முடியாதவர்கள் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். இம்மருத்து நீரினை தலையில் தேய்த்து நீராடலாம்.

இத்தினத்தில் பெற்றோர்களை வணங்கி அவர்களிடம் ஆசிர்வாதமும், கைவிசேடமும் பெறுவதும், பெண்கள் தம்கணவரை வணங்கிக் கைவிசேடம் பெறுவதும் பெரு வழக்கு. குரு, பெரியோரை சந்தித்தல், கைவிசேடம் என்பவற்றுக்கு நல்ல நாள், நல்ல நேரங்களைப் பஞ்சாங்கங்களில் குறித்தபடி பார்த்து நாம் கைக்கொள்ளலாம். ஆனால் அவை புதுவருட நாளுக்குப் பிறகு சில தினங்கள் தள்ளியும் வருகின்ற காரணத்தால் நாள் பார்க்காமல் புதுவருட தினத்திலேயே பலர் இவற்றை நடைமுறைப்படுத்துவதுண்டு.

புதுவருடப் பிறப்பு கொண்டாடும் காலம் இளவேனிற் காலமாகும். இளவேனிற் காலம் பனி நீங்கிவிட்ட காலம். சகல சீவராசிகளுமே ஏன் மரம், செடி, கொடிகள் தாமும் குதூகலமாய்த் தோற்றமளிக்கும் வேளை. இவ்விதம் இயற்கை முழுவதுமே சேர்ந்து கொண்டாடக்கூடிய ஓர் காலத்தைப் புதுவருடப் பிறப்பாகத் தெரிந்தெடுத்த பழந்தமிழரின் மதிநுட்பமும், பண்பட்ட உள்ளமும் போற்றத்தக்கன. அவர்கள் வருடப்பிறப்பு விருந்திற்கென முக்கியமாகச் சேர்த்துக் கொண்ட பச்சடி மிகவும் அருமையான வாழ்க்கைத் தத்துவத்தை தன்னுள் அடக்கியுள்ளது. அந்தப்பச்சடியானது வேப்பம்பூவும், மாம்பழமும், புளியும், சர்க்கரையும் சேர்த்துச் செய்யப்பட்ட ஒன்று. வருடப்பிறப்புக் கொண்டாட வரும் சுற்றத்தவருக்கும், நண்பர்களுக்கும், முதலில் இதையே வழங்குவார்கள். வருடம் பிறக்கும் அன்றே வாழ்வானது கசப்பும், புளிப்பும், இனிப்பும் கலந்துள்ளதென்பதை மறக்க முடியாத முறையில் மக்களுக்கு நினைவூட்டுவதை தங்கள் முதல் கடமையாக நமது மூதாதையர் கருதினர் போலும்,

புதுவருடத்தை முன்னிட்டு இல்லங்கள் தோறும் புதுப்பொலிவும், மகிழ்ச்சியும் நிறைந்து விளங்கும். இத்தினத்திலே அதிகாலையில் ஆண்டவனுடைய ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டுப் பின்பு புதுக் கருமங்களை ஆரம்பிக்கும் மரபு மிகப் பழங்காலந்தொட்டு நடைமுறையிலிருந்து வருகிறது. ஆனால் இந்த விழாவை வெறுஞ் சடங்காக மாத்திரம் கொண்டாடுவதிலும் பார்க்க வாழ்க்கைமுறையிலும் பல புதுமைகளையும், நினைவுகளையும் ஆக்கிக்கொள்வதற்கு நாம் சங்கற்பம் எடுக்கவேண்டும். அதுவே விழாவின் உண்மையான நோக்கமாகும். ஒவ்வொரு சமுதாயமும் தத்தமது மரபைப்பேணி, இனத்தைப்பேணி, பண்பாட்டைப் பேணி நடப்பதற்கு உதவி புரிவன விழாக்களே. ஆனால் இன்று நம் நாட்டில் விழாக்கள் மலிந்து விட்டன. விழாக்களின் பயன் குன்றி வருகிறது. எனவே உண்மையான கல்வியின் நோக்கத்தையும் சமுதாயத்தொண்டையும் உணர்ந்து ஸ்ரீமுக புதுவருடத்திலே நாம் சிந்தித்து செயலாற்றுவோமாக.

> எனது பக்தி, அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்தது. மனிதனுக்குப் புதிய உணர்வையும் புதிய தெம்பையும் உண்டாக்கி அவனைப் பூரணத்துவத்திற்கு – உயர்ந்த பரிபூரண வாழ்விற்கு அழைத்துச் செல்வதுதான் எனது சமயம்.
>
> எல்லாம் வல்ல இறைவன் நமக்கு இந்தப் பிறப்பைத் தந்தருளியது பிறருக்குச் சேவைசெய்து பேறுபெறுவதற்காகத்தான். எனவே பிறருக்குச் சேவைசெய்து பேறு பெறுவதுதான் பிறவியின் பயன் – சமயத்தின் சாரம்.
>
> —தவத்திரு குன்றக்குடி அடிகளார்

நம்மை நாம கெடுத்துக்கொண்டு உலகம் கெட்டுப்போய்விட்டது என்கிறோம்,

# ★ அங்கும் இங்கும் ★

★ திருமதி வானதி ரவீந்திரன் அவர்கள் எழுதிய 'சாயிபாபா அவதாரங்கள்' ஆங்கில நூலின் தமிழ் வெளியீடு மார்ச் மாதம் 10–ம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயில் பின் மண்டபத்தில் இடம் பெற்றது.

கொழும்பு சாயி மத்திய நிலையத் தலைவர் திரு. எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்திற் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

திருமதி ஸ்ரீமதி குமாரசாமி இந்நூலை தமிழாக்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

★ இவ்வாண்டு சிங்கள - இந்துப்புத்தாண்டினை ஒட்டி, இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சும், வீரகேசரி நிறுவனமும் இணைந்து தமிழ்க் கவிதைப் போட்டி ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளன. ''ஒற்றுமைப்பட்டு ஒலிக்கட்டும் இன ஒற்றுமைப்பாட்டு ஒலிக்கட்டும்'' என்பது கவிதையின் தலைப்பாகும்.

★ இலங்கை சின்மயா மிஷன் ஏற்பாட்டில் பம்பாய் வேதாந்த வாழ்க்கை நிலைய ஸ்தாபகர் ஸ்ரீ ஏ. பார்த்தசாரதியின் கீதைச் சொற்பொழிவுகள், பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் பெப்ரவரி 7ம் திகதி முதல் 13ம் திகதி வரை மாலை 6 மணிக்கு இடம் பெற்றன.

## காஞ்சி முனிவரின் நூற்றாண்டு

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகக்குரு ஸ்ரீ சந்திர செகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் நூறாவது ஜயந்தி விழா மே மாதம் 27ம் திகதி முதல் ஒராண்டு காலம் கொண்டாடப்படவுள்ளது. இது தொடர்பாக இந்தியாவின் பல பாகங்களிலும் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட உள்ளன. தமிழகத்தில் சுவாமிகள் பற்றிய சர்வதேச மலர் ஒன்றினை வெளியிட பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் கே. வேங்கட சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் அறிஞர் குழு ஒன்று இயங்கி வருகின்றது.

86 ஆண்டுகளுக்கு முன், 1907ம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 13ம் திகதி சுவாமிகள், 68வது பீடாதிபதியாக நியமனம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வாரியார் சுவாமிகள் வருகை

அருட் சான்றோராகவும், ஞான வள்ளலாகவும் போற்றப்படும் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், பெப்ரவரி மாதம் 13ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார். சுவாமிகள் அன்று மாலை, ஜெயந்தி நகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில், ஆலய கும்பாபிஷேகத் திருப்பணியை ஆரம்பித்து வைத்ததோடு 'முருகன் பாடல்' தொகுப்பினையும் வெளியிட்டு வைத்தார். கொழும்பில் தொடர்ந்து தினமும் ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆற்றிய சுவாமிகள், பெப்ரவரி 21–ம் திகதி மாலை வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு நடாத்திய பக்திப் பெருவிழாவிலும் கலந்து கொண்டு ஆன்மீக அருளாளர்களுக்கு விருதுவழங்கி கௌரவித்தார். வாரியார் சுவாமிகளின் வருகையும், தரிசனமும் அருளுரைகளும் இந்து மக்களுக்கு பெருமகிழ்வு தந்தமை குறிப்பிடத்தக்கது.

தன்னை அறிந்துகொண்டவன் தன் தலைவனையும் அறிந்து கொண்டவனாகிறான்.

## தமிழகத்தில் அமைச்சர் தேவராஜ்

ஜனவரி மாத முற்பகுதியில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள், அங்கு ஆன்மீகப் பெரியோர்களையும், அறிஞர்களையும் கண்டு இலங்கை இந்து மக்களுக்கு அவர்கள் நல்கக்கூடிய உதவிகள், ஆலோசனைகள் பற்றிக் கலந்துரையாடினார். இப்பெரியார்களிற் பலரை இவ்வாண்டு இறுதிக்குள் இலங்கை வருமாறு அழைப்புவிடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் சந்தித்த சான்றோர்களுள், திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண தபோவனத் தலைவர், சுவாமி நித்தியானந்தா, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராஜன், அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் டி.பி. மோகன், தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ஆறு. அழகப்பன், இசைப் பேராசிரியர் க பொ. சிவாநந்தம் பிள்ளை, பேரூர் ஆதீன முதல்வர் ஸ்ரீ மத் சாந்தலிங்க அடிகளார், சிரவை ஆதீன முதல்வர் ஸ்ரீமத் சுந்தரசுவாமிகள், காஞ்சி காமகோடி பீட பாலபெரியவர் ஜகத்குரு விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் வேதாத்திரி மஹரிஷி, வள்ளலார் பணிமன்றத் தலைவர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம், ரட்னகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், தருமபுரம், திருவாவடுதுறை ஆதீன முதல்வர்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

தமிழக நிதியமைச்சர், நாவலர் நெடுஞ்செழியன், கல்வி அமைச்சர், செ. அரங்கநாயகம் ஆகியோருடனும் இலக்கிய, ஆன்மீக விடயங்களுக்கான ஒத்துழைப்பு பற்றியும் அமைச்சர் கலந்துரையாடினார்.

## லண்டனிலிருந்து "கலசம்"

லண்டன் சைவ முன்னேற்றச் சங்க வெளியீடாக 'கலசம்' என்னும் காலாண்டிதழ் வெளிவருகின்றது. ''ஈசன் நெறிபரப்பி இன்தமிழ் வளர்ப்பது'' கலசத்தின் நோக்கமாகும். இவ்வாண்டு வெளிவந்துள்ள முதலாவது இதழில் ஆன்மீகக்கட்டுரைகள், சித்தாந்த சிந்தனை, சிறுவர் ஆக்கங்கள் என்பன இடம் பெற்றுள்ளன. கலசத்திற்கு ஆக்கங்கள் எழுத விரும்புவோர் 'சைவ முன்னேற்றச்சங்கம்,'' 3, Gayfery Road, Clayhall Ilford, Essex, IG 50 J G'' London எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம். திரு. மு. நற்குணதயாளன், திரு. ச. ஆனந்தியாகர் இருவரும் கலசத்தின் இணை ஆசிரியர்கள் ஆவர்.

★ பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய பரிபாலன சபையினால் நிர்மாணிக்கப்பட்ட ''இந்துகலாசார மண்டபத்தை'' இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் ஜனவரி மாதம் 29ம் திகதி காலை சுபவேளையில் திறந்து வைத்தார். இவ்வைபவத்தின் போது தமிழகக் கவிஞர் இளந்தேவன் அவர்களின் சிறப்புரையும் இடம்பெற்றது.

ஆசிரியை திருமதி ஷாமினி இராமநாதனின் மாணவியர் அளித்த நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இக்கட்டிடம் அமைவதற்காக இராஜாங்க அமைச்சர் தமது பன்முகப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து குறித்தளவு நிதியை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தன்னை தன் தலைவனோடு இணைத்துக் கொள்பவனுக்குச் சாந்தி தானே வந்தடைகிறது,

# கரங்குவிவார் மகிழுங் கோன்கழல்கள்

★ ஆழ்கடலான்

"ஆலயந்தானும் அரன் எனப்படுமே" என்பது சித்தாந்தம். ஆதியிலே அரசர்கள் இறை எனப்பட்டனர். இறைவன் — கடவுள். மன்னன் உடைய அரண்மனை போன்று ஆலயமும் அமைத்தனர். மன்னன் மட்டுமென்ன பக்தர்கள், பாகவதர்கள், துறவிகள், ஞானிகள், பொது மக்கள் கூட ஊர்கள் தோறும் கோயில்கள் அமைத்தனர். அங்கே சென்று வணங்கும் பக்தர்கள் ஒரு பூரணத்துடன் இல்லம் திரும்பினர்.

பசுவின் பால் சுரக்கும் இடம் பசுவின் மடி. நிலமெங்கும் நீர் செறிந்து நிறைந்து இருப்பினும் கிணறோ, கேணியோ அமைத்துத்தான் அந்த நீரை யாம் பயன்படுத்தலாம். குறைந்தது ஒரு குழாய்க்கிணறேனும் வேண்டும். ஆறு ஒன்று. படித்துறைகள் பல. கேணி ஒன்று. படிகள் நாலா பக்கமும் பல. இது போலவே சமயங்களும். ஆறுகள் கடலில் சங்கமம் ஆவது போல நம்மை இறைவனிடத்துச் சேர்க்கின்றன சமயங்கள்.

க்ஷேத்திரங்கள் பல அம்சங்கள் கொண்டவை. பிரகாரங்கள், அகழிகள், சுற்று மதில்கள், கோபுரங்கள், மூலக் கருவறைகள், பரிவாரமூர்த்திகள் இப்படி எத்தனை எத்தனையோ. ஆண்டவன் ஆலயத்திலே தான் எழுந்தருளியுள்ளான் என்ற அசையாத நம்பிக்கையோடு அங்கே சென்று கரங்கூப்பிச் சிரம்தாழ்த்தி நிறைவு பெறுகிறார்கள் அடியார்கள். சிற்பிகளும், ஸ்தபதிகளும், கைவினைஞரும் சேர்ந்து ஆலயத்தை சாஸ்திரவிதிப்படி அமைக்கிறார்கள். கொத்தனும், கற்றச்சனும், படிமம், படிவம் வார்ப்போரும் திருக்கோலங்களை, மூர்த்தங்களை அமைக்கிறார்கள். மண்ணிலும், கருங்கல்லிலும், சலவைக் கல்லிலும், செம்பிலும், வெண்கலத்திலும், பஞ்சலோகங்களிலும் மூர்த்தங்கள் உருவாகின்றன. வேதமுறைப்படி தம்பம், விம்பம், கும்பம் என்ற நிலையில் ஆச்சாரியர்கள் ஆவாகன ஸ்தாபனம் செய்து நித்திய நைமித்தியங்களும் நிகழ்கின்றன. ஆனால் வணங்குவோர் இல்லையாயின்?

> இறைவன் சோறு போடமாட்டான்; நிச்சயமாகப் போடமாட்டான். அவன்தான் சோற்றை உண்டாக்கிக்கொள்ள நிலம், நீர், அறிவு, ஆற்றல், உழைக்கக் கைகள் அனைத்தும் கொடுத்திருக்கிறானே!
>
> மனிதகுலம் இன்ப அன்பிலே திளைத்து இன்புற்று வாழவே இந்த உலகம் - பேசும் மொழி - ஒழுகும் சமயம் யாவும்!
>
> அரசியல் என்பது சமுதாயத்திற்கு ஒரு வேலி போல. சமயம் என்பது மனிதனுக்கு உள்ளும் புறமுமாக இருந்து அவனை உணர்வால் - சிந்தனையால் தூண்டி வளர்த்துப் பக்குவப்படுத்துகின்ற ஓர் அரும் பெரும் சாதனம்.
>
> —தவத்திரு குன்றக்குடி அடிகளார்

சுவர்க்கம் என்பது ஆசையினால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள ஒரு வெறும் குருட்டு நம்பிக்கையாம்.

வணக்கத்துக்குரிய இறைவன் அங்கே எழுந்தருளி அருள்பாலிக்கிறான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அடியவர்களுக்கு. சில வேளை கோயிற் தொழும்பர்கள் மூர்த்தங்களை எடுத்து விளக்குகிறார்கள். மினுக்குகிறார்கள் — துடைக்கிறார்கள் — இப்படி எத்தனை எத்தனையோ. இதைப் பக்தர்கள் பார்த்து மனம் புண்ணாகியும் இருக்கலாம். கோயில் நடைமுறை ஒவ்வாமையைத் தந்தாலும் பக்தனின் விசுவாசம் அவனை இழுத்துக் கொண்டு செல்கிறது. இரும்பைக் காந்தம் இழுப்பது போல. ஆயின் மூர்த்தங்களை ஆக்கிக் கொடுத்தவன் பணத்தை மாத்திரம் இலட்சியமாய்க் கொண்டிருக்கிறான். அர்ச்சகரும் கூலிக்கு வேலை செய்கிறார். அங்குள்ள மூர்த்தங்களோடு பேசுபவன் பக்தன் ஒருவனே. கல்லென்றால் வெறுங் கல் தெய்வமென்றால் தெய்வம்.

பொன்னை மறைத்தது பொன்னணி
பூசணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி
பூசணம்

போல கல்லும் கடவுளும். கல்லிலும் செம்பிலுமா இறைவன் மறைந்துள்ளான் என்பது பட்டினத்தார் வாக்கு. எனவே பேசும் தெய்வங்களான பக்தர்கள் பேசாத கல்லோடும் செம்போடும் பேசுகிறார்கள். அது எதிரொளியாக — எதிரொலியாக அவனை வந்தடைகிறது. அவனே பேசி — அவனே பதில் கண்டு — அவனே நிறைவு பெற்றுப் பரிபூரண ஆறுதலும் அமைதியுஞ் சாந்தியும் அடைகிறான். இந்த நிலைப்பாட்டைத்தான் மணிவாசகர்

கரங்குவிவார் உண்மகிழும்
கோன்கழல்கள் வெல்க

என்று பாடியுள்ளார் எனலாம். ஆதிசங்கரர் சொன்னார் நான் பிரம்மம் என்று. இரணியனும் சொன்னான் நான் கடவுள் என்று. என்ன பேதம்! ஆதிசங்கரர் இறைவனைத் தவிர ஒன்றுமில்லை என்றார். பிரகலாதனின் தந்தையோ என்னைத் தவிரக் கடவுளில்லை என்றார். மணிவாசகரோ ''ஈசனே நீயல்லதில்லை இங்குமங்கு மென்பதும் பேசினேன் ஓர் பேதமின்மை'' என்று பாடினார். என்று நீயல்லை. அன்றியொன்றில்லை என்பதுமவர் வாக்கு. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் என்று பாடிய தாயுமானார் ''எங்கணும் பெருவழக்காய், யாதினும் வல்ல வொரு சித்தாகி சித்தமிசைகுடி கொண்ட தேசோமயானந்தமே'' என்று பாடினார்.

பிறரைப் பார்த்து நாம் 'காப்பி' அடிக்க வேண்டாம். ஆனால் அவர்களுடைய நற்பண்புகளை, ஆற்றலைப் பார்த்து நாமும் அதேபோல வாழவேண்டும் என்று முயல்வோம். நல்ல மண் இருந்தால், விதை நிச்சயம் பலன் கொடுக்கும். நல்ல மனமும், பண்புகளும் இருந்தால் நிச்சயமாக வளர்ச்சி பெறுவோம். ஆனால் செடி வளரும்போது அதற்கு உரம் போடவேண்டும். தண்ணீர் விடவேண்டும். வேலி போடவேண்டும். ஆனால் இவை எல்லாவற்றையும் செய்தாலும் செடி தானேதான் வளரவேண்டும். ஒரு செடியைப் பார்த்து இன்னொரு செடி வளருவதில்லை.

விருட்சங்களை நாம் ஆலயங்களில் வைத்து வணங்குகிறோம். அவை தரும் இலைகளும் மலர்களும் இறைவனைப் பூசிக்கப் பயன் படுகின்றன. அவற்றின் கனிகள் நைவேத்தியமாக உதவுகின்றன. அவை விழுந்தாலும் விறகாகவும், கட்டடப் பொருளாகவும் பயன்படுகின்றன.

அதைப்போல் நாமும் தன்னலமின்றி வாழ்வோம். இறைபணியிலும் சமூக சேவையிலும் ஈடுபடுத்திக் கொள்வோம். அது நம்மை நிச்சயமாக உயர்த்தும்.

பகவான் சத்திய சாயிபாபா.

காலமெல்லாம் பகவத் பெருமையிலேயே மூழ்கியிருப்பவர்களது வாழ்வு பெருவாழ்வாகிறது.

ஒரு குழந்தையின் பெற்றோரும், பேணி வளர்த்தோரும் குழந்தையோடு பேசுகிறார்கள். குழந்தையோ பேசாத பொற்சித்திரம். மழலை பேச முன் குழந்தையோடு தாய் பேசுவாள். குழந்தையின் அங்க அசைவைக் கண்டு பதிலாகக் கருதி மகிழுவாள். இவ்வண்ணமே ஒரு பக்தனும். தான் வழிபடும் தலத்திலேதான் இறைவன் இருக்கிறான் என்ற அசுநோக்கோடு போகிறான். பேசி, பூசித்து வணங்குகிறான். குழந்தையின் தாய்போல பக்தனும் உளம் பூரிக்கிறான். விதம் விதமான கதைகள் பேசி பூராயம் கேட்கும் தாயும் மகிழ்கிறாள். பக்தனுமவ்வண்ணமே. எனவே கரங்குவிவாருண்மகிழும் நிலை வெளிப்படையாம். தன்னையார் ஆராதித்து வணங்குகிறார்களோ அவர்களிடத்து ஆட்பட்டிருப்பான் ஆண்டவன். பக்தி வலையிற் படுபவன் அவன். அவனைக் கட்டும் சாதனம் பக்தியொன்றே. அவன் பக்தவத்ஸலன். எனவே நினைவார் நெஞ்சில் தன் திருவடி புனைவான். வியாபகமே தன்னியல்பாய், நிராதாரமாயுள்ள தெய்வம் எங்கேனுமோரிடத்தில் இருக்க ஒரு ஆதாரம் வேண்டும். அவ்வகையிற் காட்சிப் பொருளாயமையும் ஆதாரம் ஆலயம் — மூர்த்தி என்பனவாம். ஒரு படி மேலே முக்கியமானது கருத்துப் பொருளாய் இருக்கும் ஆதாரம் அது வேறொன்றுமில்லை. ஆதரிப்பார் பக்திப் பெருக்கே, இது ஒன்று இருக்குமளவில் மூர்த்தி மூலமில்லாமலும் தெய்வம் ஓரிடத்தில் இருக்கலாம். இது இன்றேல் ஆலய மூர்த்திகள் இருந்தும் தெய்வமங்கில்லாமல் இருக்கலாம். எனவே தொண்டர் தம் உள்ளத் தொகுப்பே இறைவன் நினைப்பதாக சிந்தை செல்லும் எல்லை. எனவே பக்தன் கரங்குவித்து ஆண்டவனோடு பேசி உள்ளம் மகிழ்கிறான்.

---

உலகமும் உலகப் பொருட்களும் நம்மைத் துயரத்தில் ஆழ்த்த முடியாது. ஆனால் மனிதர்களாகிய நாம் அதைச் சங்கடத்தில் இழுத்துக் கொண்டு போய் விட்டுவிடலாம். உலக மக்கள் அனைவரையும் நமது செயல்களால், எண்ணங்களால், உணர்வுகளால் துன்பத்துக்காளாக்கி விடலாம். வானிலை, சூழ்நிலை, சுற்றுப்புறச் சூழல் இப்படி ஒவ்வொன்றையும் கெடுக்கக்கூடிய சக்தி நம்மிடம் இருக்கிறது. அவற்றை நல்ல முறையில் வைத்துக்கொண்டு, நல்ல விதமாகப் பயன்படுத்திக் கொள்வதும் நம் கையில்தான் இருக்கிறது.

— சுவாமி தயானந்த சரஸ்வதி

---

## கவரிமான்

வீணையின் தந்தி அறுந்து கிடந்தது. தூசு படிந்து கிடந்த வீணை துன்பத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறது.

பக்கத்திலிருந்த மத்தளம் அதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது.

மத்தளம் சொன்னது:

''வீணையே! கை கொஞ்சம் பலமாக விழுந்தாலே நீ அறுந்து போகிறாய். என்ன தான் உன்னிடம் அருமையான ஓசை இருந்தென்ன? என்னைப்பார்! நான் எத்தனை அடிகளையும் தாங்கிக்கொண்டு கம்பீரமாக வாழ்ந்துகொண்டிருக்கிறேன்!''

வீணை அமைதியாகப் பதில் சொன்னது ''மானஸ்தர்களுக்கு ஒரு வார்த்தை போதும்!''

ஆதாரம்: கவிஞர் கண்ணதாசன் எழுதிய 'குட்டிக் கதைகள் என்ற நூலிலிருந்து.

---

உனது வாழ்வு என்னும் ஐபமாலையில் அன்பையும் அறிவையும் மணிகளாகக் கோர்த்து வைத்திருப்பாயாக.

# ★ திரட்டு ★

* வள்ளலாரின் இளமைக்காலத்தில் ஒரு முறை ஆசிரியர் 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் ஒருவரையும் பொல்லாங்குசொல்லவேண்டாம்' என்ற உலக நீதியை கற்பித்து விட்டு திரும்பச் சொல்லுமாறு கேட்டுக்கொண்டாராம். வள்ளலார் மௌனமாக இருப்பதைக் கண்ட ஆசிரியர் 'ஏன் சொல்லவில்லை' எனக்கேட்டபோது 'வேண்டாம், வேண்டாம்' என்று சொல்வதைவிட 'வேண்டும்' 'வேண்டும்' என வேண்டலாமே என எண்ணிக் கொண்டிருந்தேன் என்றாராம் வள்ளலார். 'அப்படியானால் நீ வேண்டுமானால் வேண்டும் எனப் பாடு பார்ப்போம்' என்றார் ஆசிரியர்; உடனேயே

  'ஒருமையுடன் நினது திருவடிமலரை நினைக்கின்ற
  உத்தமர்தம் உறவு வேண்டும்.
  உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசுவார்
  உறவுகலவாமை வேண்டும்'

  எனப் பாடல் பிறந்தது.

* நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையில் உள்ள பதினொரு பாடல்களில் அறுபது நாயன்மார்களின் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

* தேவாரம் - வேதசாரம் என வழங்கப்படுகின்றது. அவ்வாறே உபநிடதங்கள் திருவாசகங்களாகும்.

* அறிவுபூர்வமாக வேதப்பொருளை விளக்கமுற்பட்ட முயற்சிகளே தரிசனங்கள் எனப்பட்டன. இவை ஆறு ஆகும். ஆறு தரிசனங்களும், அவற்றின் கர்த்தாக்களும் வருமாறு: 1. நியாயம் - கௌதமர் 2. வைசேடிகம் - கணாதர் 3. சாங்கியம் - கபிலர் 4. யோகம் - பதஞ்சலி 5. பூர்வ மீமாம்சை-ஜைமினி 6. வேதாந்தம் - வியாசர்.

* 'தோடுடைய செவியன்' எனப்பாடத் தொடங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய இறுதிப்பதிகம் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' எனும் நமச்சிவாயப் பதிகமாகும். இந்தப் பதிகத்தைப் பாடியே அவர் சோதியில் கலந்தார்.

* சிவபெருமான் அபிஷேகத்திற் பிரியமானவர், அம்பிகை தோத்திரத்திற் பிரியமானவள், விஷ்ணு அலங்காரத்திற் பிரியமானவர்.

* அறுகம்புல் ஒரு சிறந்த மூலிகை. இது ஓரிடத்தில் முளைத்து கொடி போல் நீண்டு படரும். விநாயக வழிபாட்டுக்கு அறுகு மிக இன்றியமையாதது. இதனை விநாயகருக்கு அர்ப்பணிப்பதால், ஆயுள் வளரும்; பிணிகள் நீங்கும் எனப் புராணங்கள் உரைக்கின்றன.

* அவதாரம் என்ற சொல்லுக்கு இறங்கி வருதல் எனப் பொருள். மனிதர்களிடம் கொண்ட கருணையினால் பரம்பொருள் இப்பூவுலகில் தோன்றிலீலைகள் செய்வதையே அவதாரம் என்கிறோம்.

---

பேசாத வார்த்தை யாரையும் துன்புறுத்துவதில்லை.

* பூஜைகளின் தொடக்கத்தில் சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர் புஜம்' எனத் தொடங்கும் ஒரு விநாயகர் துதி இடம் பெறும். இது விஷ்ணு சகஸ்ரநாமத்தின் தொடக்கத்திலுள்ள சுலோகமாகும்.

* திருமுருகாற்றுப்படை தமிழில்எழுந்த முதல் பக்தி நூல். இதனை நக்கீரர் ஆக்கினார்; இந்நூல் முருகன் திரு வடிப்பெருமை, சூரனைக்கொன்றமை போன்ற முருகன் புகழினைப்பாடு கின்றது. திருமுருகாற்றுப்படை, பக்தர்கள் முருகனை வணங்க ஆற்றுப் படுத்துகின்றது. இது 'பத்துப்பாட்டு நூல்கள் முதலாவதாகும்.

* அக்காலத்தில், வேதமோதும் வேதியருக்கு மன்னன் வழங்கிய நிலம் சதுர்வேதிமங்கலம் எனப்பட்டது. அவ்வாறே, திருமணக் கிரியைகள், நீத்தார் கடன்கள் மந்திரவழி ஆற்றும் அந்தணர்க்கு மன்னர் வழங்கிய நிலம் பிரமதேயம் எனப்பட்டது. கோயில் களுக்கென மன்னர் வழங்கிய நிலம் தேவதானம் எனப்பட்டது.

* மகான்களையும், முனிவர்களையும் 'பகவான்' எனக்குறிப்பிடுவதுண்டு. அதற்கு ஞானம், வைராக்கியம், பூரண ஐசுவரியம், அட்டசித்தி கைகூடிவரல், தார்மீகப்பெருமை, புகழ் என ஆறு பண்புகள் நிறைந்தவர் எனப்பொருள் படும்.

* 1893–ஆம் ஆண்டு அமெரிக்கா சிகாகோ சர்வமத மாநாட்டிற் கலந்து கொண்டு, இந்து மதப் பெருமையை உலகுக்கு உணர்த்தியதோடு, உலகளாவிய ஆன்மீகப் புரட்சிக்கு வித்திட்டவரான சுவாமி விவேகாநந்தர் அவர்களின் வாழ் நாள் 39 ஆண்டுகள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

## அழிவில்லை

உடைந்துபோன ஒரு மண் பானையின் கழுத்து பூமியில் கிடந்தது.

வழிப்போக்கன் ஒருவன் அதைக் கவனிக்காமல் மிதிக்கப் போனான்.

''மிதிக்காதே, மிதிக்காதே; நான் ஒரு பானையின் கழுத்து!'' என்று சத்தம் போட்டது அது.

வழிப்போக்கன் சிரித்தான்.

''இனி உனக்கென்ன வாழ்வு? உன்னை மிதித்தாலென்ன? உடைத்தாலென்ன, நீ இப்பொழுது பானை யல்ல; உடைந்துபோன அதன் கழுத்து!''


கழுத்து இதனைக் கேட்டுச் சிரித்தது.

''முன்பு நான் பானை; இப்பொழுது கழுத்து; நாளை மீண்டும் களிமண்! பிறகு ஒரு புதிய பானை! ஆனால் நீ...?''

வழிப்போக்கன் யோசித்தான். அதைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுத் தன் வழியே போனான்.

(கவிஞர் கண்ணதாசனின் 'குட்டிக் கதைகள்' நூலிலிருந்து)

சாந்தியை அறியாத மனிதனுக்கும் விலங்குக்கும் வேற்றுமையில்லை.




ஆலய நிர்வாக சபையின் அன்பளிப்பு

இரு மருங்கு மணிக்கோபுர இராஜகோபுரம்

*29 – 03 – 1993*

மகா கும்பாபிஷேகப் பெருவிழா

கொம்பனித்தெரு

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இராஜகோபுரம்

கொழும்பு இரண்டு, கொம்பனித் தெருவில் வண்ணமயமாக அமைந்துள்ளது ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி ஆலயத்தின் இராஜகோபுரம். 81 அடி உயரம் கொண்ட இராஜ கோபுரமும், இருமருங்கும் 51 அடி உயரங்கொண்டஇரண்டு மணிக் கோபுரங்களும், புதிய கொடிஸ்தம்பமும் அழகுறக் காட்சி தருகின்றன.

இவ்வாலயத்தின் மகாகும்பாபிஷேகம் மார்ச் மாதம் 29ம் திகதி மிகச்சிறப்பாக நடைபெற்றது. சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். தொண்டமான், கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு எம். எஸ். செல்லச்சாமி இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி.பி. தேவராஜ் கொழும்பு மாநகரசபையின் பிரதிமேயர் கௌரவ கே. கணேசலிங்கம் ஆகியோரும் தலைநகர் ஆலயங்களின் பிரமுகர்களும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் கும்பாபிஷேகப் பூஜைகளிற் கலந்துகொண்டனர்.

லண்டனிலிருந்து, பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. கு. சிதம்பரப்பிள்ளை, செயலாளர் திரு. ச. ஆனந்ததியாகர், பொருளாளர் திரு. வி. கே. இராமநாதன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் வருகை தந்து பூஜைகளிற் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை, பிரதிஷ்டா சிரோன்மணி பிரம்மஸ்ரீ விசுவநாதக்குருக்கள் சென்னையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ என். முத்துக்குமாரசுவாமி குருக்கள், பிரம்மஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், லண்டன் ஸ்ரீமுருகன் ஆலய பிரதமகுரு ஆர். நாகநாத சிவக்குருக்கள் ஆகியோரும் இருபதுக்கு மேற்பட்ட சிவாச்சாரியார்களும் நடத்திவைத்தனர்.

இராஜகோபுரத்தில் 15 அடி உயரமான முருகனின் விசுவரூபமும் 450 தெய்வ வடிவங்களும் காட்சி தருகின்றன. தமிழ் நாட்டைச் சேர்ந்த நாகலிங்கம் ஸ்தபதி குழுவினரே இவற்றை சிறப்புறப் பொளிந்து வண்ணந் தந்துள்ளனர்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, தென்னிந்திய இசைக்கலைஞர்களான இசைப்பேரரசர், டாக்டர் சீர்காழி சிவ சிதம்பரம், பத்மஸ்ரீ கே. ஜே. ஜேசுதாஸ் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள் இடம்பெற்றன.

புனருத்தாரண வேலைகளும், இராஜ கோபுரப்பணிகளும் இனிதே நிறைவேற ஆலய அறங்காவலர் சபையும், இராஜ கோபுரத் திருப்பணிச் சபையும் ஆற்றிய பணிகள் வியந்து போற்றத்தக்கவை.

ஆலய அறங்காவலர், திரு. எஸ். தனபாலா, தர்மகர்த்தா சபையின் தலைவர் திரு.எஸ். சிவப்பிரகாசம் செயலாளர் திரு. கே. பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அயராத பணிகளோடு, பொருளுதவியும் சரீர உதவியும் நல்லாலோசனைகளும் அளித்த அனைவரது ஒத்துழைப்பும் இணைந்து கொம்பனித் தெருவில் இராஜ கோபுரம் கம்பீரமாகக் காட்சி தருகிறது.

— இராஜேஸ்வரி முத்துசாமி
கலாசார அலுவலர்

தீமையை அங்கீகரிக்காதே ; அதை அங்கீகரிக்குமளவு நீ அதை வளர்க்கின்றாய்.

# இந்துப் பண்பாடு

## 1. வழிபாட்டு அறை

இந்து சமயத்தவர் ஒவ்வொருவர் வீடும் ஆலயமாக விளங்க வேண்டும். வழிபாட்டுக்கு தனியாக ஒரு அறையை நியமித்துக்கொள்ள வேண்டும். இடவசதி அற்றவர்கள் நகரங்களில் வசிப்பவர்கள் மூன்று தட்டுகள் உள்ள சிறிய அலுமாரி ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும். அந்த அலுமாரியை வீட்டின் தென் பாகத்தை நீக்கி வடபாகத்தில் கிழக்கு முகமாக வைத்து வடக்கு முகமாக இருந்து வழிபாடு செய்ய வேண்டும். வசதியின்படி அமைத்துக்கொள்ள வேண்டும். அக்கினியும் இயமனும் நிருதி என்ற அசுரனும் வசிக்கும் இடமாதலால் தென் பாகம் நீக்கப்படுதல் வேண்டும்.

## 2. திருவுருவம்

நடுத்தட்டில் அவரவர் வழிபட விரும்பும் இறைவனின் சித்திரப்படத்தை அமைத்துக்கொள்ளுதல்வேண்டும். மனம் ஒருமைப்படுவதற்காக உருவத்திருமேனியை வைத்தல் அவசியம். புகைப் படம், இடுப்புவரை உள்ள அரைப்படம் என்பவற்றை விலக்கவேண்டும். கண்ணாடியில் எழுதிய படம் மத்திமமாகும். இவை மூவர்ணப்படங்களாக இருத்தல் வேண்டும். விஸ்வரூப நிலையை விட்டு தடத்த நிலையில் நின்று ஐந்தொழில் புரியும் போது பிரம்ம விஸ்ணு, உருத்திரர் பாகமாக நின்று அருளுகின்றார் இறைவன். அம்மூவரின் வர்ணமாக அமைந்திருக்கவேண்டுமென்பதே அதன் கருத்து.

இறைவன் இறைவியின் திருவடியை வணங்குவதுதான் எமது குறிக்கோள். அதனால் திருவடியில்லாத அரைப்படம் விலக்கப்படும். கண்ணாடியில் எழுதிய படம் தற்செயலாக உடைந்தால் மனதிற்குக் கஸ்டம். படம் வைத்து கண்ணாடிபோட்டிருந்தால்உடைந்தாலும் மீண்டும் கண்ணாடி போடலாம். தோஷமில்லை. கண்ணாடியின் ஊடாக உருவத்திருமேனியைத் தரிசித்து வழிபடுவது முறையாகும். ஆலயங்களில் கருவறையில் இறைவனின் உருவத் திருமேனியையும், மகாமண்டபத்தில் தர்ப்பணம் (கண்ணாடி) என்ற பொருளையும் வைத்திருப்பதைக் காணலாம். நல்லூர், வண்ணார்பண்ணை சிவன்கோவில்களில் இவ்வாறு வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அடியார்கள் வெளியில் நின்று தரிசிக்கும்போது கண்ணாடியினூடாகத் தரிசிப்பார்கள். அதன் கருத்து முக்குணங்கள் பொருந்திய தரிசனம் கண்ணாடியில் பட்டு ரஜோகுணம், தமோகுணம் சிதறுண்டு சத்துவகுணம் மட்டும் சத்துவ குணமூர்த்தியான இறைவனின் திருவடிகளில் பதியும். பிம்பத்திற்குத் தோசமில்லை. அடியாரின் ரஜோகுணம், தமோகுணம் நீங்கி சத்வகுணம் சேரவேண்டிய இடத்தில் சேர்ந்ததாக அமையும். ஆகவேதான் கண்ணாடி போடப்பட்ட சித்திரப் படம் வேண்டும் என்று கூறப்பட்டது.

## 3. திருவிளக்கு

இறைவனை வழிபடும்போது விளக்கேற்றிவைத்து வழிபடுதல் அவசியமானது. பொதுவாக மாலைநேரம் விளக்கேற்றி ஒருமணி நேரமாவது எரிந்துகொண்டிருக்கவேண்டும். முடிவில் ஒரு அரிசியைத் தீபத்தின் மேற்தட்டில் வைத்துத் திரியை உள்ளே இழுத்து ஒளியை

உனது குணத்தையும் குணக்கேட்டையும் தியானம் என்னும் கண்ணாடி விளக்கிக்காட்டுகிறது.

எண்ணெயில் மறையச் செய்தல் வேண்டும். கையால் வீசியும் வாயால் ஊதியும் அணைக்கக்கூடாது. விளக்கிற்கு உத்தமம் நெய். மத்திமம் நல்லெண்ணெய், அதமம் தேங்காயெண்ணெய் வசதிபோல உபயோகிக்கலாம். தீபச்சுடரின் ஊடாகப் பரஞ்சுடராகிய இறைவனை வழிபாடு செய்வதே தீப வழிபாட்டின் தத்துவமாகும். ஆலயங்களில் சாதாரண நேரத்தில் இறைவனைத் தரிசிக்கும்போது எமக்கு ஏற்படும் உள்ள உணர்ச்சியைவிட தீபாராதனை நடக்கும்போது ஏற்படும் உணர்வு எத்தகையது என்பது நமது அனுபவத்திற் காணலாம்.

ஆகவே வழிபாடு செய்யும்போதும் தீபம் ஏற்றியிருத்தல் வேண்டும். எண்ணெயை ஸ்நேகம் என்றும் திரியை தசை என்றும் வடமொழியாளர் கூறுவர். ஸ்நேகம் என்றால் பக்தி. தசை என்றால் உடல், பக்தி எவ்வளவுக்கு இறைவனிடம் ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கு ஆத்மஜோதி பிரகாசிக்கின்றது. பரஞ்சோதியிடமிருந்து ஆத்மா ஒளியைப் பெறுகின்றது. ஒளியின் பிரகாசம் கூடக்கூடக் செயற்கரிய சாதனைகளை பெரியோர்கள் செய்து முடிப்பர். எனவே ஆத்மஜோதி பக்தியாகிய எண்ணெயில் மறைந்து, பின்னர் தொழிற்படும்போது வெளியில் வந்து பிரகாசமடைகின்றது, என்ற உட்கருத்தைக் கொண்டுதான் திரியை உள்ளே இழுத்துச் சோதியை எண்ணெயில் மறைக்கவேண்டும் என்று சான்றோர் பகர்ந்துள்ளனர்.

அன்புக் காணிக்கையாக ஒரு அரிசியை வைத்து எப்பொழுதும் எனது உள்ளொளி பெருகவேண்டுமென்று பிரார்த்தனை செய்து முடித்தல் அதன் கருத்து. அருளொளி பெண்மையைக் குறிப்பதால் பெண்கள் விளக்கேற்ற வேண்டும். அவர்களே முடிவில் மறைக்க வேண்டும், என்றும், சான்றோர் வகுத்துள்ளனர். தீபஜோதி கிழக்கு முகமாக எரியவேண்டும். தெற்கு முகமாக எரியவிடக்கூடாது. பிதிர் உலகம் தென்திசையில் உள்ளது. எப்பொழுதும் இருளாக இருக்கும் அத்திசையை நோக்கிபிதிர் பிரயாணம் செய்யும் போது மாத்திரம் அதற்குஉதவியாகதீபஜோதியை தெற்கு நோக்கி வைத்து வழிபடவேண்மென விதி அமைந்துள்ளது.

ஐந்து முகத்திலும் ஜோதி விளங்குமாயின் தென்திசை குற்றம் இல்லையாகும். இரு விளக்குகள் வைத்து தெற்கு வடக்கு திசை நோக்கி அமையுமாயின் குற்றமில்லை. இடக்கையால் எக்காரியமும் செய்தல் குற்றமாயும் வலக்கையை இடக்கையுடன் சேர்த்துச் செய்தால் அக்காரியம் தூய்மையாகக் கருதப்படுவது போல் ஏனைய திசைகளிலும் சுடர் சுவாலிக்கும்போது தென்திசைக் குற்றம் மறையும். வழிபாட்டிற்காக வைக்கப்படும் தீபத்தை வெள்ளிதோறும் தேய்த்து சுத்தமாக்கி குங்குமப்பொட்டிட்டு பின் விளக்கேற்ற வேண்டும். மலர் கிடைத்தால் அம்மலரை விளக்கின் பாதத்தில் வைத்தல் வேண்டும். சரமாகத் தொடுத்தால் விளக்கின் மேற்பாகத்தில் அணிய வேண்டும். விளக்கின் முடியில் மலர் வைத்தல் கூடாது.

## 5. சிவசின்னம்

விபூதியை சிலையால் வடிகட்டி அதனை ஒரு மட்பாண்டத்தில் வைத்து அதனுள் வெட்டிவேர், இலாமிச்சை வேர், சண்பகப்பூ, தாழம்பூ என்பவற்றை சிறு துண்டுகளாக வெட்டி விபூதியில் சேர்த்து மேலே மண்சட்டியால் பூசி அலுமாரியின் மேற்தட்டில் வைத்து உருத்திராட்ச மாலையைச் சாற்றி வைக்கவேண்டியது. வழிபடும் நேரம் அம்மாலையை அணிந்து வழிபாடு முடிந்ததும் அந்த விபூதியை சிறிதளவு எடுத்து அணிந்துகொண்டு திரும்பவும் அம்மாலையை அப்பாத்திரத்தில்சாத்திவிடுவது நல்லது. இது சிவசின்ன வழிபாடாகும். விபூதியை சிவமாகவும் மட்பாத்திரத்தைச் சக்தியாகவும் பாவித்து

இரும்பின் தரத்தை நெருப்பு சோதிக்கிறது. மனிதனது தரத்தை துன்பங்கள் சோதிக்கின்றன.

வணங்கும்படி ஆகமம் கூறியுள்ளது. இதனால் கொடிய நோய்கள் அணுக மாட்டாது. தீயவர்களால் துன்பமுண்டாகாது. கெட்ட தேவதைகளின் தாக்குதல் உண்டாகாது. இதுவே ரட்சையாகும்.

### 6. சுகந்த தூபம்

குங்குலியமும் சாம்பிராணியும் சமமாக எடுத்து பொடி செய்து தூபமிடுதல் வேண்டும். தணல் வசதி இல்லாதபோது ஊதுபத்தி ஏற்றி வைக்கலாம்.

### 7. மாக்கோலம்

அரிசி மாவினால் தினமும் பூசை அனுமாரிக்குமுன் ஒருசிறு கோலமிடுதல் வேண்டும். கற்பொடியால் கோலமிடக் கூடாது. கோலமிடுதல் பெண்கள் செய்ய வேண்டியது. பழக்கமில்லாவிட்டாலும் நான்கைந்து முறைசெய்தால் பழக்கமாகிவிடும். வெள்ளி செவ்வாயில் பின்வரும் முறையில் செய்வது நல்லது. நான்கு பக்கத்திலும் ஐந்து வரிகள் நடுவில் இரு கோடுகள் குறுக்காக அமைத்தல் மற்றைய தினங்களில் தாமரை வடிவம் எட்டுக் கோடுகள் வரைந்து இதழ்களை வரைதல், கோலமிட்ட இடத்தில் இல்லத்தின் தெய்வ சாந்நித்தியம் உண்டாகும். வெண்மை நிறமுடைய அரிசிமா ரஜோகுணம், தமோ குணங்களை நீக்கி சத்வ குணத்தை வளரச்செய்யும். ஆகவேதான் சுவாமி விவேகானந்தர் மேல்நாட்டில் சென்று இந்துக்களின் பண்பை விளக்கும் பொழுது கோலமிடுவதையும் விளக்கியுள்ளார்.

மாரிகாலத்தில் கோலமிட்டால் ஈ, எறும்புகள் அதை உணவாக உட்கொள்ளுகின்றன. இரக்கம், மனத்தூய்மை உண்டாகும். இலக்குமி அங்கே வசிப்பாள் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

### 8. துளசி வணக்கம்

துளசிச் செடியின் சிறப்புப் பற்றி விஞ்ஞானிகள் வெகு விரிவாக எடுத்து விளக்கியுள்ளனர். வசதி உள்ளவர்கள் துளசிக்கு ஒரு மாடம் அமைத்துக்கொள்ளுவார்கள். வசதியில்லாதவர்கள் ஒரு வாளியில் அல்லது ஒரு பூந்தொட்டியில் வைத்துக்கொள்வார்கள். காலையில் குளித்தவுடன் துளசியை மும்முறை வணங்கியும் மாலையில் சிறு விளக்கேற்றி வைத்து மும்முறை வணங்கியும் ''தாயே என்றும் குறையாத சௌபாக்கிய வாழ்வு அளிப்பாய்'' என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். இதனால் சௌபாக்கிய வாழ்வு, மன மகிழ்வு, நோயற்றவாழ்வு, மனநிறைவு என்பன பெறலாம். துஷ்ட (ஜந்து) பூச்சி புழுக்கள் அணுகாது துளசி பல நன்மைகளைத் தரும். இல்லத்தில் அடிக்கடி மங்கள நிகழ்ச்சிகள் நடை பெறும். பிரிந்தவர் கூடுவர். இன்னும் பல நன்மைகள் உண்டாகும்.

(பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகளின் ''இந்துகலா சாரம்'' எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.)

---

நம்முள் ஓர் அரிய சக்தி உறைந்திருக்கிறது. அதை வடிவமும் பண்பும் தந்து வருணிக்க முடியாது. ஆனால் அந்தச் சக்தியே நமது வாழ்க்கையில் வெவ்வேறு செயல்களாக உருவெடுக்கிறது. இதை உணர மனிதன் எவ்வளவு தூரம் வெளிவாழ்க்கைக்குத் தன்னைக் காட்டிக்கொள்கிறானோ, அந்த அளவிற்குப் பார்வையை உள்முகமாகவும் திருப்பிச் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். அதுவே தியானம். அது அமைதியுடன் ஆழ்ந்து ஈடுபடுத்தப்படும்போது, ஆழ்நிலைத்தியானமாக உருவெடுக்கிறது.

— மகரிஷி மகேஷ் யோகி

---

உலகில் உள்ள தீமைகள் அனைத்தையும் அகற்றுவதற்கு அன்பு ஒன்றே உற்ற அருமருந்தாகிறது

# சுவாமி விவேகாநந்தரின் சிகாகோ சொற்பொழிவு

1893ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ம் திகதி சிகாகோவில் நடைபெற்ற சர்வமத மகாசபையில் இந்தியாவிலிருந்து, இந்து மதப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு சுவாமி விவேகாநந்தர் உரைநிகழ்த்தினார். இந்நிகழ்வின் நூற்றாண்டை நினைவுபடுத்துவதற்காக அச்சொற்பொழிவு இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

அமெரிக்க நாட்டுச்
சகோதர சகோதரிகளே!

பிரபஞ்சத்திலேயே மிக மிகத் தொன்மைவாய்ந்த சாது சங்கத்தின் சார்பில் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். எல்லா மதங்களுக்கும் அன்னையான மதத்தின் சார்பில் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். எல்லா வகுப்புக்களையும் பிரிவுகளையும் சேர்ந்த கோடானு கோடி இந்துக்களின் சார்பில் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

சகிப்புத் தன்மையையும் உண்மைகளையும் உலகம் முழுவதும் அங்கீகரிக்க வேண்டும். பாருக்கெல்லாம் உபதேசிக்கும் ஒரு மதத்தைச் சேர்ந்தவன் நான் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். எல்லா மதங்களும் எல்லா தேசங்களும் மறுத்த அகதிகளுக்கெல்லாம் நிழல் தந்த நாட்டைச் சேர்ந்தவன் என்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

சகோதரர்களே! என்னுடைய பாலப் பருவத்திலிருந்து நான் மனனம் செய்து நினைவில் வைத்துள்ள ஒரு சுலோகத்திலிருந்து சில வரிகளை உங்களுக்கு மேற்கோள் காட்டுகிறேன்:

த்ரயீ ஸாங்க்யம் யோகம் பசுபதி
மதம் வைஸ்ணவமிதி
ப்ரபின்னே ப்ரஸ்தானே பரமிதிமதம்
ப்ரத்யமிதி ச!
ருசீனாம் வைசித்ர்யாத் ருஜு குடில
நாநாபத ஜுஷாம்
ந்ருணாமேகோ கம்யத்ஸ்த்வமஸி
பயஸாம் அர்ணவமிவ!!
—சிவமஹிம்ன ஸ்தோத்திரம்

பல்வேறு நதிகள், பல்வேறு இடங்களில் உற்பவித்தாலும் ஒரே கடலில் கலப்பது போலவே, பலவிதமான மனப்போக்குள்ளவர்கள் பின்பற்றும் பலப்பல மார்க்கங்களும் – அவை நேராக இருப்பினும் சரி, கோணலாயிருப்பினும் சரி— உன் ஒருவனிடம் தான் இட்டுச் செல்கின்றன.

இப்போது நடக்கும் இந்த மாநாடு கீதையில் போதிக்கப்படும் கீழ்க்கண்ட அற்புத சித்தாந்தத்தின் நிரூபணமேயாகும். எந்த உருவில் என்னை ஒருவன் நாடினாலும் அவனை நான் சென்றடைகிறேன். இறுதியில் என் ஒருவனிடமே கொண்டு விடும் பாதைகளைத்தான் எல்லா மக்களும் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது கீதை வாக்கு. பிரிவு மனப்பான்மை, குறுகிய நோக்கம், அதன் வழித்தோன்றும் சுயமத வெறி இவை இந்த எழிலார்ந்த உலகை நீண்ட நாட்களாகப் பிடித்து விட்டன; அதனைக் கொடுமையால் நிரப்பி மக்களின் இரத்தத்தால் நனைத்துவிட்டன; நாகரீகங்களை அழித்துவிட்டன; தேசங்களைப் பூரணமாக துர்த்தசையில் ஆழ்த்தி விட்டன.

இந்த பயங்கர பூதங்கள் இருந்திராவிடில், இப்போது இருப்பதைவிட மனித சமுதாயம் மிக மிக முன்னேறியிருக்கும். இன்று அந்த பூதங்களின் அழிவுக் காலம் வந்துவிட்டது. இந்த மாநாட்டின் பெருமையைத் தெரிவித்து இன்று காலையில் முழங்கிய மணி மதவெறிக்கும், போர் வாளாலும் பேனாவாலும் செய்கிற மதச் சண்டைகளுக்கும் சாவு மணியாக இருக்கும் என ஆர்வமுற நம்புகிறேன்.

**தன்நம்பிக்கையை ஒருபொழுதும் இழந்துவிடாதே. நீ பேராற்றல் படைத்தவன்.**

# ஆலயத்தில் தரிசனம் செய்யும் விதிமுறை

1. ஆலய தரிசனம் செய்பவர்கள் நீராடி, தூய உடை அணிந்து, திருநீறு, ருத்திராட்சம் போன்றவை அணிந்து கொண்டு செல்லவேண்டும்.

2. வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், மலர்கள் முதலிய வழிபாட்டுப் பொருள்களைக் கொண்டு போகலாம்.

3. முதலில் ஆலய கோபுரத்தை வணங்கவேண்டும்.

4. உள்ளே சென்று, கொடிமரத்தின் முன்னே, ஆண்கள் தலை, மோவாய், இருகைகள், இருபுயங்கள், முழந்தாளிரண்டு ஆகிய எட்டும் நிலத்தில் படுமாறு அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

பெண்கள் தலை, இரு கைகள், இரு முழங்கால்கள் ஆகிய ஐந்தும் நிலத்தில் படுமாறு பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

5. கொடிமரத்தின் எதிரில் வணங்கியபின் நந்திதேவரிடம் விடைபெற வேண்டும்.

(மானசிகமாக விடைபெறுதல் மிகவும் அவசியம்.)

6. நந்திதேவரிடம் விடை பெற்றுக் கொண்ட பிறகு, விநாயகரை ஒரு முறையும், சிவபெருமானை ஐந்து முறையும், அம்பாளை நான்கு முறையும், நவக்கிரகங்களை ஒன்பது முறையும், வலம் வந்து வணங்க வேண்டும்.

7. சமயாச்சாரியர்கள், நடராஜப் பெருமான், பிற தெய்வங்கள் யாவற்றையும் வணங்கிவிட்டு, இறுதியாக சண்டேசுரநாயனாரை அடைந்து, மூன்றுமுறை கைகளால் தாளமிட்டு, சிவதரிசனப் பலனைத் தந்தருளும்படி வேண்டுதல் அவசியமாகும்.

8. சண்டேசுர நாயனாரிடம் சிவதரிசனப் பலனைப் பெற்றபிறகு கொடிமரத்தின் அருகில் வடக்குமுகமாக அமர்ந்து திரு ஐந்தெழுத்தை (ஓம் சிவாய நம) 108 முறை தியானம் செய்ய வேண்டும்.

9. இறுதியாக, பைரவரை வணங்கி சிவச்சொத்து எதையும் எடுத்துச் செல்லவில்லை என்று உறுதிகூறி கோயிலை விட்டு வெளியே வருதல் வேண்டும்.

அன்றாடம் திருக்கோயில் செல்ல முடியாதவர்கள், குறிப்பிட்ட புண்ணிய நாட்களிலாவது அவசியம் சென்று இறைவனை வணங்க வேண்டும்.

அவசியமாக, சிவத்தல யாத்திரைகளை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டும்.

இப்படி சிவ புண்ணியம் பெற விரும்பும் சைவப் பெருமக்கள், ஆலயதரிசனத்துடன் நின்றுவிடக் கூடாது.

''எல்லாவித வழிபாட்டின் சாரமாவது, தூய உள்ளத்துடன் பிறருக்கு நன்மை செய்வதே ஆகும். ஏழை எளிய மக்கள் நோயுற்றவர்கள் ஆகியவர்களிடம் கடவுளைக் கண்டு அவர்களுக்குச் சேவை செய்து உதவி செய்கிறவர்கள்தான் சிவ பெருமானின் இன்னருளுக்குப் பாத்திரமாகிறார்கள். சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புகிறவர்கள் அவருடைய படைப்புகளாகிய உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் சேவை செய்ய வேண்டும்.

''சுயநலமின்மையே உண்மையான சமயப்பற்றுக்குச் சான்றாகும். ஒருவன் எவ்வளவுக்குத் தன்னலமின்றி மற்றவர்களுக்காக வாழ்கிறானோ, அந்த அளவிற்கு அவன் ஆத்மஞானம் பெற்றுச் சிவபெருமானின் அருகில் இருக்கும் தகுதியைப் பெறுகிறான்.

''அப்படியின்றி, சுயநலமிக்க ஒருவன் எல்லா ஆலயங்களுக்கும் சென்று அபிஷேகம், ஆராதனை செய்திருப்பினும், சிறுத்தைபோல தன்னுடம்பெல்லாம் திருநீறு பூசியிருப்பினும், அவன் சிவபெருமானைவிட வெகுதூரம் விலகியுள்ளவனே ஆகிறான்'' என்பது சுவாமி விவேகானந்தரின் அருள் வாக்காகும்.

எனவே, கடவுளை வணங்கும் நாம் அனைவரும் மிகுந்த கருணை உடையவர்களாக இருக்க வேண்டும்.

கருணையால் மட்டுமே கருணாகர கடவுளை அடைய முடியுமே தவிர இறைவனை அடைவதற்கு வேறு வழி இல்லை.

தூய்மையிலும் மௌனத்திலும் நிலைத்திருப்பவனது சொல்லுக்கு ஆற்றல் மிக உண்டு.

# முருகன்

★ திருமுருக கிருபானந்தவாரியார்

வழிபட்டோருக்கு எளிதில் கருணை புரியும் தெய்வம் முருகன் என்று உணர்க.

''ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம்
கலிகல்மிஷ நாசினீம்''

என்ற திருவாக்கு இதனை வலியுறுத்தும். கலியில் விளையும் வன்மையான பாவங்களைப் போக்க வல்லது முருகவேளின் புகழ் ஒன்றேயாகும் என்பது இதன் பொருள்.

குழந்தைகள் தம்மிடமுள்ள விலையுயர்ந்த பொருள்களைச் சிந்திக்காமலும், கேட்போனுடைய நிலையை எண்ணாமலும் தரும் இயல்பு உடையவை.

என்றும் அகலாத இளமையுடைய முருகன் தன்னை விரும்பி வழிபடும் அடியார்களின் துன்பங்களை நீக்கி இன்பங்களை அருள வல்லவன்.

ஓம் என்ற பிரணவம் அ. உ. ம. என்று மூன்று அங்கங்களையுடையது.

அ – சிருஷ்டிக்கிறது.

உ – ரட்சிக்கிறது.

ம – ஒடுக்குகிறது.

இந்த மூன்றில் ரட்சிக்கும் எழுத்தாகிய உகரமே சிறந்தது. நாம் இறைவனிடம், ''ஈசனே! என்னை சிருஷ்டி செய்'' என்றுகேட்கின்றோமா? ''ஈசனே!என்னை சம்மாரம் செய்'' என்றா கேட்கிறோம்? இல்லை, ''என்னை ரட்சிக்க வேண்டும்'' என்றுதானே வேண்டுகிறோம்? இதையே ''பாஹி மாம்'' என்பர் வடமொழியில்.

எனவே உகரம் ரக்ஷக எழுத்து என்று அறிய வேண்டும். அதனால்தான் உலகங்களையும் திருத்தொண்டர்களையும் ரகஷிக்கின்ற நூலாகிய பெரிய புராணம் தொடக்கத்தில் 'உலகெலாம்' என்று தொடங்குகிறது.

கம்ப நாடரும் ''உலகம் யாவையும்'' என்று தொடங்குகிறார்.

நக்கீரரும் ''உலகம் உவப்ப'' என்று ஆரம்பிக்கிறார். இதனால் உகரம் எத்துணை முக்கியமுடையது என்பது நன்கு புலனாகிறது.

ஆன்மாக்களுக்கு மூன்று நிலைகளுண்டு.

அவை கேவலம், பெத்தம், முக்தி நிலை என்பன.

இருளும் அறியாமையும் துன்பமும் சேர்ந்த நிலையில் ஆன்மாக்கள் கிடந்தன. அது கேவல நிலை.

இருளும் ஒளியும், துன்பமும் இன்பமும், அறிவும் அறியாமையும் நிரம்பிய நிலையில் வாழ்கிற நிலை பெத்த நிலை.

இன்பமே, அறிவே, ஒளியேயாய் நின்ற நிலையில் ஆன்மா இன்புறும் நிலை முக்த நிலையாகும். எனவே ஆன்மாக்களுக்கு மூன்று நிலைகள் என உணர்க.

முருகு - என்பது பகுதி.

அன் - ஆண்பால் ஒருமை விகுதி.

முருகு என்ற சொல்லில் ம் + உ, ர் + உ, க் + உ என்ற மூன்று உகரங்கள் வருவதை உணர்க.

கேவல நிலையிலும், பெத்த நிலையிலும் முக்த நிலையிலும் காக்கும் கடவுள் முருகன் என்பது இதனால் தெளிவாக விளங்கும்.

இதனால் முருகன் என்ற சொல் சிறப்புடையது. இது வழி வழி வந்த மகாவாக்கியமாகும்.

''அரும் பெறல் மரபின்
பெரும் பெயர் முருக''

என்றார் நக்கீரர்.

நாவடங்கியிருக்கப் பயின்றவனே நாவை நன்கு பயன்படுத்த வல்லவனாகிறான்.

கிழக்கே, மேற்கே, தெற்கே வடக்கே, மேல் உலகிலே, கீழ் உலகில் ஆக ஆறு திசைகளில் உலக ஆன்மாக்களை உய்விக்க இந்த ஆறு திசைகளையும் பார்த்தருளும் ஆறு திருவுருவத்துடன் அந்தப்பரமன் விளங்குகிறார்.

வினைகளைக் களையும் வேலையும், பயங்களை அகற்றும் மயிலை உடையவனாக அந்தப் பெருமான் விளங்குகிறார்.

சிவம் - சத்து, உமை-சித்து, முருகன் ஆனந்தம்.

இதுதான் சோமஸ்கந்த மூர்த்தம்.

விநாயகரும் சிவபுத்திரராய் இருப்பினும் சிவனுக்கும் உமைக்கும் இடையில் விநாயக மூர்த்தி அமைவதில்லை; முருகன் உருவமே அமைந்துள்ளது. இதனால் முருகன் ஆனந்த வடிவம் என்பதும், அந்தப் பரம்பொருளை வழிபட்டோர் ஆனந்தம் பெறுவர் என்பது உறுதியாகின்றது.

சத்தெனப்படும் தாணில் சிவத்தினும்
சித்தெனப்படும் தேவியிடத்திலும் புத்திரப் பெயர் பூண்டில் கானந்த வத்துவின் கழல் வாழ்த்தி வணங்குவோம்.

உயிர்கள் யாவும் விரும்புவது ஆனந்தம் என்ற ஒன்றையேயாகும். இந்த ஆனந்தத்தை அருளவல்ல தெய்வம் முருக மூர்த்தி ஒன்றையாகும்.

சுப்ரமண்ய அஷ்டோத்தர சத நாமாக்களில் ''ஆனந்தாய நம'' என்று ஒரு நாமம் வருவதையும் சிந்தித்து உணர்க.

குழந்தைகளால் வரும் இன்பம் சுதானந்தம், முருகனால் வரும் இன்பம் சதானந்தம்.

''ஞானம் சுரப்பமகிழ் ஆனந்த
சித்திபோடெ
நாளுங்களிக்க பதம் அருள்வாயே''

என்று அருணகிரிப் பெருமான் கூறுகின்றார்.

ஆனந்தம் ஞான ஒளியால் விளையும், முருகன் ஞான ஒளிமயமானவர்.

''ஒளியில் விளைந்த உயர் ஞான
பூதரத் துச்சியின் மேல்
அளியில் விளைந்ததோர் ஆனந்தத்
தேனை''

—கந்தரலங்காரம்

''பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாக''

என்கிறார் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.

எனவே ஞானத்தை விரும்புவோர், ஒளியை விரும்புவோர், ஆனந்தத்தை விரும்புவோர் முருகப் பெருமானை வழிபட வேண்டும்.

முருகப் பெருமான் கலியில் கண் கண்ட தெய்வம். கலியுகவரதன்.

ஆதலால் முருகனைக் காதலால் அனைவரும் உள்ளன்புடன் உருகி வழிபட்டு எல்லா நலன்களையும் எளிதில்பெறுவார்களாக.

நன்றி—இராமகிருஷ்ண விஜயம்

மூலஸ்தானத்தின் கருவறையில் வெளி உலகில் காணும் காற்றும் ஒளியும் பிறவும் புகமுடியாது. பிற எண்ணங்களுக்கு இடம் தராத நம்முடைய உள் மனதையே இது பிரதிபலிக்கிறது. அத்தகைய இடத்தில் தான் இறைவனை நாம் காணமுடியும். இதையே கருவறையில் உள்ள மூலஸ்தானம் உணர்த்துகிறது. நடை திறந்து மணி ஓசையுடன் தீபாராதனை நடைபெறும்போது, இருள் நிறைந்திருந்த மூலஸ்தானத்தில் தூய்மையான ஒளிப்பிழம்பில் இறை உருவத்தை நாம் காண்கிறோம். நாம் நமக்குள்ளே உணரவேண்டிய இறை உணர்வின் தோற்றமே இது.

— சுவாமி பரமேசுவரானந்தா

யார் ஒருவன் புகழ்ச்சியில் இன்புறுகிறானோ அவன் இகழ்ச்சியில் துன்புறுவது நிச்சயம்.

அருளாளர்

வரிசையில்...

# அருணகிரிநாதர்

சண்மதத்தை மறுமலர்ச்சியடையச் செய்து கௌமாரத்தை நிலை நாட்டிய கௌமார சமயாச்சாரியார் அருணகிரி நாதர்.

நினைக்க முத்தியளிக்கும் திருத்தலமான திரு அண்ணாமலையில் கோயில் கொண்ட இறைவன்பணியே தன்பணி, எனக்கொண்டு இறைபணியில் ஈடுபட்டு வந்தார் முத்தம்மையார் எனும் கணிகையர் குலதிலகம். அவருக்கு ஒரு பெண் மகவு அன்றி ஆண்மகவு கிடையாது. வேண்டுவார் வேண்டும் வரந்தரும் கருணைக் கடவுள் கந்தப்பெருமானின் கழல் போற்றி அல்லும்பகலும் அனவரதமும் வழிபட்டு, ஓர் ஆண்மகவு வேண்டி நின்றார்.

கருதுவார் இன்னல் களையும் கந்தனும், நல்லதோர் நாளில் நல்லோரையில், முற்பிறவியில் தவிர்க்கமுடியாத சந்தர்ப்ப வசத்தால் செய்ய நேர்ந்த ஒரு செயலின் காரணமாக நானிலம் நலம் பெற்றிட முத்தம்மையாரின் மகவாக ஆதி சங்கரரையே தோன்றச் செய்தார். அக் குழந்தைக்கு அருணகிரி எனப்பெயர்சூட்டி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக தாயும் மகளும் அன்புகாட்டி ஆசையுடன் வளர்த்து வந்தார்கள்.

அருணகிரியாரின் ஏழாவது வயதில் முத்தம்மையார் இறந்துவிட்டார். இறக்கு முன் மகள் ஆதியை அருகழைத்து 'அம்மா ஆதி!, அருணகிரியைக் கருவுறும் முன்பே திருமுருகன் எனது கனவில் தோன்றி உலகம் போற்றும் உத்தமன் உன் வயிற்றில் தோன்றுவான் என்று அருள் செய்தார். அதுபோலவே அருணகிரியும் பிறந்து உள்ளான். அவன்மனம் கோணாது அவனை ஆதரிப்பது உன் கடமை!'' என்றாள். ஆதியும் தம்பியை காப்பாற்றுவதாக தாய்க்கு வாக்குக் கொடுத்து கண்ணை இமை காப்பதுபோல் காத்து வந்தாள். பள்ளிக்குச் செல்லாததையும் கண்டித்தாள் இல்லை.

காளைப் பருவத்தை அடைந்த அருணகிரி வேசியர் ஆசையில் வேகம்கொண்டு அவர்கள் இல்லமே குடிகொண்டு, கைப் பொருள் இழந்து பெருநோயும் பெற்றார், அப்போதும் தமக்கையார் தம்பியின் இஷ்டப்படியே கேட்கக் கேட்க பணம் கொடுத்துக் கொண்டே வந்து வறுமையுற்றாள்.

நல்வினைப்பயனை அடையும்காலம் கிட்டியதும், தம்பியார் தமக்கையாரிடம் பொருள் கேட்டுவந்தபோது வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்படுத்தத் திருவுள்ளம் கொண்ட திருமுருகனும், இதுவரையில் கேட்டபோது இல்லை எனாது கொடுத்து வந்த ஆதியைத் தம்வசம் இழக்கச் செய்து, ''தம்பி! உனக்குக் கொடுக்க என்னைத்தவிர பொருள் ஏதும் இல்லை. நானும் ஒரு பெண்தான்'' என்றுசொல்லச் செய்தார். இச்சொல் அருணகிரியைத் தன்னை உணரச் செய்தது. தனது செயலுக்கு வருந்தி இனியும் தமக்கையாரைக் காண்பதற்குத் தான் தகுதியற்றவன் எனக்கருதி உயிர் விடுவதேமேல் என்ற முடிவுகொண்டு, அண்ணாமலையார் கோயிலின் கோபுரத்தின்மேல் இருந்து கீழேகுதித்தார்.

சண்மதத்தை நிலைநாட்டவேதோன்றியவர் அருணகிரியாதலால், ஷண்முகக் கடவுள், முன்தோன்றி ஈராறு கரங்களால் அவரைத் தாங்கித் தனது திருக்கோலம் காட்டி, வேல்கொண்டு ஆறெழுத்தை நாவில் பொறித்து, அபரிமிதமான வித்தைகளையும் ஓதுவித்து, பிரணவ உபதேசம் செய்து 'முத்தைத்தரு' என்று அடி எடுத்துக் கொடுத்துத், தன்புகழ்பாடும்படி பணித்து சகலவிதமான கவிகளையும் பாடும் ஆற்றல்களை அருளினார்.

திருமுருகன் மலர்க்கரம்பட்டதும் அருணகிரியாரது வியாதிகள் யாவும் மறைந்தன. தேகம் பொன்போல் பொலிவுற்றது. அவர்பால் இருந்த மயக்கங்கள் யாவும்மறைந்துஞானப்பிழம்பாகக் காட்சி தந்தார்.

திருமுருகன் எடுத்துக் கொடுத்த அடியை முதலாகக் கொண்டு மடைதிறந்தாற்போல் பாடிப் பரவசமடைந்தார். ஆடினார்! பாடினார்! திருவண்ணாமலையில் உள்ள முருகன் கோயில் அனைத்திற்கும் சென்று முருகனைப் பாடிப் பேரானந்தம் அடைந்தார். திருமுருகன்

---

உலகெலாம் தேடியும் பெறமுடியாத சாந்தி உன் உள்ளத்திநுள்ளே ஒளிர்ந்துகொண்டிருக்கிறது.

இட்ட சட்டளைப்படி அவன் கோயில் கொண்ட திருத்தலங்கள் யாவற்றையும் அடியார்குழாம் சூழச்சென்று பாடி அவன் திருவருளைப் பெற்றார். வயலூர்சென்று அவன் அருள் பொய்க்காத பொய்யாக் கணபதியின் அருளால் 'பக்கரை விசித்ர மணி' பாடினார். அங்கிருந்து விராலி மலை சென்று பெருமானைப்பாடி அட்ட மாசித்தி பெற்றார். திருவண்ணாமலை வந்தார். அருணகிரிநாதரின் புகழ் திக்குகள் எங்கும் பரவவே, மற்ற புலவர்களை வாதில்வென்று அவர்கள் காதை அறுத்துவரும் வில்லிப்புத்தூராரையும் எட்டியது. அவரும் அருணகிரிநாதரை வெற்றிகாண திருவண்ணாமலையை அடைந்தார்.

திருவண்ணாமலையை ஆட்சிசெய்த பொக்கணபிரவுட தேவராயர் முன்னிலையில் இருவருக்கும் வாதம் தொடங்கியது. அதில் அருணகிரிநாதர் அந்தமும் ஆதியும் இல்லாத ஆண்டவன்மீது கந்தர் அந்தாதிபாடி, வில்லிப்புத்தூராரை வெற்றிகண்டு அவர்தம் செருக்கடக்கினார். தோற்றவரின் காதை அறுக்காமல், மற்றவர்களின் காதுகளையும் காப்பாற்றியதால் கருணைக்கு அருணகிரி என்று போற்றப்பட்டார்.

அருணகிரிநாதரின் புகழ்கண்டு சகிக்காத சம்பந்தாண்டான் என்னும் தேவி உபாசகன் அரசன் பொக்கணனை அணுகி, தங்கள் இருவரில் யார் ஒருவர் தாம் வழிபடும் கடவுளை அரசசபைக்கு அழைத்து வருகிறார்களோ அவர்களைத்தான் அரசன் ஆதரிக்க வேண்டும் என்று கூறினான், சம்பந்தாண்டான் தேவியை அழைத்தும் தேவி சபைக்கு வரவில்லை. எனவே அவன் தோற்றான். அருணகிரியார் அழைக்க முருகன் ஒருநொடியில் வந்து எல்லோருக்கும் காட்சிதந்து மகிழ்வித்தார்.

''உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில் ஒருநொடி தனில் வருமயில் வீர'' என்பது அருணகிரியார் வாக்கு காணுங்கள்.

இந்நிகழ்ச்சி சம்பந்தாண்டானுக்கு அருணகிரிநாதர் மீது அதிகமான வெறுப்பை உண்டாக்கியது. அருணகிரிநாதர் வடநாட்டுப் பயணத்தைமுடித்துக் கொண்டு திருவண்ணாமலை திரும்பிய போது, சம்பந்தாண்டன், அரசனை எப்படியோ மயக்கி, அருணகிரிநாதரை தேவலோகத்து பாரிஜாத மலரைக் கொண்டுவரும்படி சொல்லச் செய்தான்.

தன்னை தேவலோகத்துக்கு அழைக்கவே திருமுருகன் இந்த வழியைச் செய்துள்ளதாக உணர்ந்து அருணகிரிநாதர் தேவலோகம் சென்று பாரிஜாத மலர் கொண்டு வருவதாகச் சொல்லி அண்ணாமலையார் ஆலயம் அடைந்து முன்னம் தனக்கு உதவிய கோபுரத்தில் தனது உடலை மறைவாக யாரும் காணாத வகையில் இருத்தி அருகில் இறந்து கிடந்த கிளியின் உடலில் புகுந்து விண்ணுலகம் நோக்கிப் பறந்தார்.

சம்பந்தாண்டான் தனது ஆட்களில் சிலரை அவ்வுடலைக்கைப்பற்றி மறைத்து வைத்தான். சிலகாலம் சென்றதும் அச்சடலத்தை கோயிலின்மேல்மடத்தில் கிடத்தி, தேவலோகம்சென்றவர் அங்கு செல்லமுடியாமல் இறந்து விட்டதாக அரசனை நம்ப வைத்து, அனுமதி பெற்று சடலத்தை எரியூட்டினார்.

அருணகிரிநாதரும் அச்சிதையினின்றும் பாரிஜாதமலருடன் வெளிப்பட்டு அரசன் பொக்கண்ணனிடம் பாரிஜாத மலரைக் கொடுத்தார். பின் சிலகாலம் திருவண்ணாமலையில் இருந்து திருத்தணிகை சென்று கந்தர் அநுபூதி வகுப்புகள் முதலிய பாடினார். திருவண்ணாமலை வந்து அங்கு திருமுருகனுடன் ஐக்கியமாகி விட்டார். அவர் சமாதி இன்றும் திருவண்ணாமலையில் உள்ளது.

அருணகிரிநாதர் பாடிய பனுவல்கள், திருப்புகழ், கந்தர் அலங்காரம், அந்தாதி, அனுபூதி வகுப்புகள் வேல் மயில் சேவல் விருத்தங்கள், திருஎழுகூற்றிருக்கை ஆகிய நவமணிகளாகும்.

பக்கங்களின் அடியிலுள்ள அருள்மொழிகள் சுவாமி சித்பவானந்தர் அருளியவை.

# இலங்கையின் இந்துக் கோயில்கள் பற்றிய வரலாறு

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கையிலுள்ள பிரதான இந்துக் கோயில்களின் வரலாறுகளைத் தயாரித்து நூலுருவில் மூன்று தொகுதிகளாக வெளியிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சிவன், முருகன், கிருஷ்ணர், பிள்ளையார், அம்மன், ஐயனார் முதலான 45 வரையான கோயில்கள் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இக்கோயில்கள் பற்றி எழுத விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கோயில்கள் வரலாறு பற்றிய கட்டுரைகள், பௌராணிக மரபுகள், அரச ஆவணங்கள், இலக்கியக் குறிப்புக்கள், தொல்பொருட் சின்னங்கள், நடைமுறை வழமைகள், ஏடுகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு நோக்கில் எழுதப்பட வேண்டும்.

தல வரலாறு, ஐதீகங்கள், நித்திய, நைமித்திய கருமங்கள், விழாக்கள், வழிபாட்டு முறை, கட்டிட, சிற்ப, ஓவிய அமைப்புக்கள் போன்றவை விளக்கப்படுதல் வேண்டும்.

திணைக்களம் நியமிக்கும் அறிஞர் குழுவினால் விண்ணப்பதாரரின் தகைமைகள் பரிசீலிக்கப்படும். அத்துடன் அறிஞர் குழுவின் வழிகாட்டலுக்கமைய கட்டுரைகள் எழுதப்படவும் வேண்டும்.

சுய முகவரி எழுதப்பட்ட தபாலுறையினை அனுப்பி மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்க.

பணிப்பாளர்,

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
9ம் மாடி, 'காப்புறுதி இல்லம்'
21, வோக்ஷோல் வீதி
கொழும்பு - 02

படங்கள் உதவி: எஸ். மயூரன்

# விற்பனைக்குள்ள நூல்கள்

★ **புறநானூறு**

மூலமும் உரையும். டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதிய
ஆராய்ச்சிக் குறிப்புகள் அடங்கிய பதிப்பு.
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு. விலை ரூ. 200-25

★ **சிலப்பதிகாரம்**

அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும்,
டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு:
தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு. விலை ரூ. 281-25

★ **வாழ்வியற் களஞ்சியம் 1 - 12 தொகுதிகள்**

சமூகவியல், பொருளியல், மொழியியல், தொல்பொருளியல்,
வரலாறு முதலான பல்துறை சார்ந்த விளக்கங்களை அளிக்கும்
கலைக்களஞ்சியம்.

தஞ்சாவூர்ப் பல்கலைக்கழக வெளியீடு
12 தொகுதிகளின் விலை ரூ. 8100.00

10% விசேட கழிவுடன் ரூ. 7290 ஆக விற்கப்படுகிறது. பெறவிரும்புவோர்
முற்பணம் அனுப்பிப் பதிவுசெய்தல் வேண்டும்.

★ **பாரதிபாடல்கள்**

ஆய்வுப்பதிப்பு: சீனி. விசுவநாதன் அவர்களால் காலவாரியாக
தொகுக்கப்பட்டது. பதிப்பாசிரியர், பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி.
தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு. விலை ரூ. 180.00

★ **சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்**

3ம் தொகுதி மட்டும் இருப்பில் உள்ளது.
சங்க இலக்கியங்களிற் காணப்படும் அருந்தமிழ்ச் சொற்களுக்கான
விளக்கமளிக்கும் கலைக்களஞ்சியம். முதன்மைப் பதிப்பாசிரியர்
முனைவர். ப. அருணாசலம். 'ச' தொடக்கம் 'தோ' வரையான
எழுத்துகளுக்குரிய சொற்கள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன.
தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு. விலை ரூ. 562-50

★ **கோயிற் களஞ்சியம் - அறிமுகம்**

ஆலயங்களோடு தொடர்புடைய விடயங்களை விளக்கும் நூல்.
கோ. மு. முத்துசாமிப்பிள்ளை இதன் சிறப்பாசிரியர்.
தஞ்சைப் பல்கலைக்கழக வெளியீடு. விலை ரூ. 180.00

★ **அறிவியற் களஞ்சியம்**

தொகுதி 1ம், 4ம், மட்டும் தற்போது இருப்பில் உள்ளன. பௌதீகம்,
இரசாயனம், உயிரியல், வானியல் ஆகிய விஞ்ஞானத் துறைகளைப் பற்றிய
கலைக்களஞ்சியம். தஞ்சைப் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு.
ஒரு தொகுதியின் விலை ரூ. 675.00

**இவற்றுடன் ஆன்மீக, தமிழ்த்துறை சார்ந்த நூல்கள், திணைக்கள வெளியீடுகள் என்பன கருமபீடத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணி முதல், பிற்பகல் 3 மணிவரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.**

குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு-12